விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 ஆடி 6 ஷவ்வால் 21 இதழ் 157
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 21-7-84

## வதந்திகளை நம்பாதீர்!

### பந்தோபஸ்து அமைச்சு அறிக்கை

(கொழும்பு)

''கடந்த ஜூலைக்கலவரம் இடம்பெற்று ஓராண்டு முடிவடையும் தினம் அணுகுவதை முன்னிட்டு பரப்பப்படும் வதந்திகளினால் பொதுமக்கள் கலவரமடையவோ, தப்பான வழிகளில் இட்டுச் செல்லப் படவோ கூடாது''

இவ்வாறு தேசிய பந்தோபஸ்து அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''கடந்த வாரம் பயங்கரவாதிகளினால் தாக்குதல் நடத்தப்படுமென்று பொதுமக்களிடையே பீதியை ஏற்படுத்தும் வகையில் வதந்தி பரப்பப்பட்டது.

''இருமுனைப்பிரிவுகளை ஏற்படுத்தும் வகையில் வதந்திகள் பரப்பப்படுகின்றன. தென்பகுதியிலுள்ள சிறுபான்மை மக்களிடையே பீதியை ஏற்படுத்தும் வகையிலும், தென்பகுதியிலுள்ள பெரும்பான்மை மக்களிடையே ஆத்திரத்தை உண்டாக்கும் விதத்திலும் வதந்திகள் பரப்பப்படுகின்றன. இவற்றையிட்டு பொதுமக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

''சமாதானத்தையும், அமைதியையும் விரும்பும் சகல பிரிவினரும் பொதுமக்களும் அரசாங்கத்திற்கு ஆதர

(8ம் பக்கம் பார்க்க)

# யாழ். பல்கலைக்கழகத்தில் ரூபா 5.89 000 கொள்ளை!

(ஏ. வி. மாணிக்கம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக காசாளர் பகுதியிலிருந்து ஐந்து லட்சத்து 89 ஆயிரத்து 742 ரூபா இனந்தெரியாத நபர்களால் துப்பாக்கிமுனையில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது!

நேற்றுக்காலை 11-00 மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழக நிர்வாகப்பகுதி, விஞ்ஞானபீடம், கலைப்பீடம் மற்றும் பாதுகாப்புப் பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு ஊதியம் வழங்குவதற்கென வைத்திருந்த பணமே கொள்ளையடிக்கப்பட்டதாம்.

பல்கலைக்கழக மேல்மாடியில் காசாளர் பகுதி இருக்கிறது. இந்த அறை கண்ணாடிகளால் பாதுகாக்கப்பட்டிருந்தது. இரு காசாளர்கள். பணத்தைக் கணக்கிட்டுக் கொண்டிருந்த சமயம், அறைக்கதவோரம் பாதுகாப்பு உத்தியோகத்தர் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்தார்.

திடீரென, இனந்தெரியாத நான்குபேர் காசாளர் பகுதிக் கதவோரம் சென்றதும், பாதுகாப்பு உத்தியோகத்தர் அறைக்கதவைபடாரெனமூடி, பூட்டிவிட்டாராம்.

கதவைத்திறந்து அறைக்குள் செல்லமுடியாத இனந்தெரியாத நபர்கள அறைக் கண்ணாடியை உடைத்து, உட்புகுந்து, துப்பாக்கி முனையில் பாதுகாப்பு உத்தியோகத்தரையும், காசாளரையும் பயமுறுத்தி தடுத்து வைத்துக் கொண்டனராம்.

கணக்கிட்டு கட்டுக்கட்டாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த பண நோட்டுக்களை, உள் புகுந்த நபர்கள் எடுத்தெடுத்து வெளியில் நின்றவரிடம் கொடுக்க, அவர் அவற்றை பையொன்றில் போட்டுக்கொண்டதும், கொள்ளை அடித்தவர்கள் ஊழியர்களை எச்சரிக்கை செய்துவிட்டு கீழ்க்கட்டிடப் பகுதிக்கு வந்து சைக்கிள்களில் ஏறி பல்கலைக்கழகப்பின் பக்க வழியாகச் சென்றுவிட்டனராம்.

கொள்ளை அடிக்கப்பட்ட பணத்தில், மகாபொல புலமைப்பரிசிலுக்கான பணமும் அடங்கியிருந்ததாகத் தெரிவிக்

(8ம் பக்கம் பார்க்க)

## ரூ. 7 லட்சம் வீடியோ கஸெட் சிக்கின

சென்னை ஜூலை, 20

படகு ஒன்றிலிருந்து 7லட்சம் ரூபா பெறுமதியான வீடியோகஸெட்டுகளை சென்னை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

## சீக்கிய தீவிரவாதி சுட்டுக் கொலை

(புதுடில்லி)

சீக்சியத் தீவிரவாதியொருவர் பஞ்சாப் பொலிசாரினால் நேற்று சுட்டுக் கொல்லப்பட்டார்.

## உரிமை கோரவில்லை

(யாழ்ப்பாணம்)

பொலிஸ் அதிரடிப் பிரிவினரின் துப்பாக்கிப் பிரயோகத்தின் போது மரணமான ரஞ்சன் லாலா என்பவரின் சடலம் இன்னமும் உறவினரால் உரிமை கோரப்படாத நிலையில் யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டிருக்கிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் தொண்டைமானாற்றுப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இரு வாலிபர்களை

(8-ம் பக்கம் பார்க்க)

## ஹர்த்தால், உண்ணாவிரதம்

### கூட்டணி பொதுச்சபை இன்று கூடுகிறது

(ஏ, வி. மாணிக்கம்)

83ம் ஆண்டு ஜூலை கலவரங்களுக்கு அனுதாபம் தெரிவித்து, தமிழர் விடுதலைக் கூட்டணி துக்கவாரமும், ஒரு நாளைக்கு உண்ணாவிரதமும், ஒருநாளைக்கு பூரண ஹர்த்தாலும் அமைதியான முறையில் அனுஷ்டிக்கவுள்ளது.

இதற்கான ஆலோசனைகளை நடத்தி முடிவெடுக்க இன்று சனிக்கிழமை காலை தமிழர் விடுதலைக்கூட்டணி பொதுச்சபை திருநெல்வேலியிலுள்ள தலைமைக்காரியாலயத்தில் கூடவுள்ளது.

தமிழர்விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு எம். சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறவிருக்கும் இன்றைய பொதுச்சபைக்கூட்டத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள கூட்டணியின் சகல பொதுச்சபை உறுப்பினர்களும் சமுகமளிப்பார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு முக்கிய உரை நிகழ்த்தவுள்ளார்.

இம்மாதம் 23-ம் திகதி தொடக்கம் ஒரு வாரத்துக்கு துக்கதினம் அனுஷ்டிப்பதுடன் 24-ம் திகதி உண்ணாவிரதமும் 25-ம் திகதி பூரண ஹர்த்தாலும் அனுஷ்டிக்கவேண்டுமென்ற கோரிக்கை பொதுச்சபைக்கூட்டத்தில் நிறைவேற்றப்படலாம் என தெரிய வருகிறது.

முன்னர் 25-ம் திகதியே உண்ணாவிரதமும் ஹர்த்தாலும் அனுஷ்டிக்கப்படுமென்று

(8ம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்டம் நீடிப்பு

(கொழும்பு)

அவசரகாலச்சட்டம் மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் இச்சட்டத்தை நீடிப்பதற்கான பிரேரணை மூன்றில் இரண்டு அதிகப்படியான வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

இப்பிரேரணைக்கு ஆதரவாக 123 வாக்குகளும் எதிராக 10 வாக்குகளும் கிடைத்தன. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, கம்யூனிஸ்ட்கட்சி ஆகியவற்றின் எம்.பிக்கள் இந்நீடிப்புப் பிரேரணையை எதிர்த்தனர் (கி)

## இளைஞர் சடலங்கள் பெற்றோரிடம் ஒப்படைப்பு

[யாழ்ப்பாணம்]

குருநகர் பழைய பூங்கா வீதியில் 'சைனைட்' அருந்தி இறந்ததாகக் கருதப்படும் இரு இளைஞர்களின் சடலங்களும், பெற்றோர் விடுத்த கோரிக்கைக்கிணங்க அவர்களிடம் நேற்று முன்தினம் இரவு கையளிக்கப்பட்டன,

யாழ்ப்பாணம் கொய்யாத் தோட்டத்தைச் சேர்ந்த மொறிஸ் றெஜினோல்ட் (19வயது), கொழும்புத்துறை மணிபுரியைச் சேர்ந்த ஐயம்பிள்ளை மாணிக்கவாசகர் [24வயது] ஆகியோரே இவ்விரு இளைஞர்களுமாவார்.

கடந்த புதன்கிழமை பிற்பகல் குருநகர் பழையபூங்கா வீதியில் வைத்து இராணுவத்தினர் சோதனை நடத்திய போது, மோட்டார் சைக்கிளில் அச்சமயம் இருவாலிபர்கள் வந்ததாகவும், இராணுவத்தினர் அவர்களை மறித்த போது ஒரு வாலிபர் சிறிது

(8-ம் பக்கம் பார்க்க)

## கரை ஒதுங்கிய மீன்பிடி வள்ளம்

(யாழ்ப்பாணம்)

இந்திய மீன்பிடி வள்ளமொன்று இரு தினங்களுக்கு முன் இயந்திரக் கோளாறு காரணமாக நெடுந்தீவு கரையை அடைந்துள்ளது.

இவ்வள்ளத்தில் வந்த தமிழ் நாட்டைச்சேர்ந்த செபமாலை சேகர் என்பவரும் மற்றும் நால்வரும் தஞ்சமடைந்துள்ளனர்.

உதவி அரசாங்க அதிபர் திரு. மகாலிங்கம், இதுபற்றி யாழ். அரசாங்க அதிபருக்கும் இந்திய தூதராலயத்தின்

(8ம் பக்கம் பார்க்க)

### யாழ். மேல் நீதிமன்றத்தில்

## எதிரிக்கு மருத்துவசான்றிதழ் வழங்கிய டாக்டர் ஆஜர்!

(யாழ்ப்பாணம்)

மருத்துவ சான்றிதழ் வழங்கும் போது நன்றாக பரிசோதனை செய்த பின் அவதானமாக வழங்கவேண்டும்'

யாழ். மேல் நீதிமன்றத்தில், கச்சேரி மோசடி வழக்கென்றில் எதிரிக்கு மருத்துவச்சான்றிதழ் வழங்கிய டாக்டரிடம் மேல் நீதிமன்ற நீதிபதி திரு கே.பாலகிட்ணர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ் வழக்கில் எதிரியான கணபதிப்பிள்ளை ராசதுரை என்பவர் நீதிமன்றம் வராமல் வயிற்றோட்டம் என்று மருத்துவ சான்றிதழை சமர்ப்பித்திருந்தார்.

இதனை அரச சட்டத்தரணி கே ஞானதாசன் ஆட்சேபித்து எதிரியை அரசாங்க சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்குட்படுத்த வேண்டும் என்றார்.

எதிரிசார்பில் ஆஜரான சட்டத்தரணி எஸ் லோகேஸ்வரன் மருத்துவ சான்றிதழ் வழங்கியவர் எம் பி பி.எஸ் பட்டம் பெற்ற ஒரு டாக்டரென்றும், அது உண்மையான மருத்துவ சான்றிதழ் என்றும் தெரிவித்தார்.

நீதிபதி எதிரியை பரிசோதித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு சட்ட வைத்திய அதிகாரிக்கு உத்தரவிட்டார்.

சட்டவைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.சுப்பிரமணியம் எதிரியை பரிசோதித்தபின் 17ம் தேதி எதிரிக்கு எந்தவித வயிற்றோட்டமும் இல்லை என்றும் தான் வீடுசென்றிருந்தபோது எதிரி அங்கிருக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

இதைத்தொடர்ந்து மருத்துவ சான்றிதழ் வழங்கிய டாக்டரை ஆஜராகுமாறு நீதிபதி உத்தரவிட்டதை தொடர்ந்து டாக்டர் ஆஜராகி 15-ம் திகதி எதிரியை பரிசோதித்து பார்த்தபோது வயிற்றோட்டம் இருந்ததாகவும் [illegible]

(8 ம் பக்கம் பார்க்க)

## தொலைக்காட்சி சேவை பாதிப்பு

(கொழும்பு)

பீதுருதாலகால என்றஇடத்திலுள்ள தொலைக்காட்சி ஏரியலில் இடம்பெற்ற கோளாறு காரணமாக நேற்று இரவு தொலைக்காட்சி சேவை பாதிக்கப்பட்டது (இ-வெ)

## காங்கேசன்துறைமுகத்தில் நிலக்கரிக் கப்பல்!

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சிமெந்து ஆலைக்காக 31 ஆயிரம் தொன் நிலக்கரியை ஏற்றிக் கொண்டு இருகப்பல்கள் காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடைந்துள்ளன

''கிறிஸ்ரொக்'' என்னும் கப்பலில் 9 ஆயிரம் தொன் நிலக்கரியும் ''பிஸ்ஸஸ் பிளண்டர்'' என்னும் கப்பலில் 22 ஆயிரம் தொன் நிலக்கரியும் வந்தடைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## விற்பனைக்கு

பதிவுசெய்யப்படாத Honda C 90, C 70, M D 90 யும் 86 Sri தொடரிலிக்க C D 125 மோட்டார் சைக்கிளும் சதாஸ் மோட்டோர்ஸ், 56/2, ஸ்ரான்லி வீதி (இலங்கை வங்கி அருகாமையில்) உடன் விற்பனைக்கு உண்டு. 996

கடைகளுக்குப் பாவிக்கக் கூடிய பெரிய நிலைகள் கதவுகள் சிறிய நிலைகள் கதவுகள் யன்னல்கள், அடைவு கடைக்குப் பாவிக்கக்கூடிய 24 லாச்சி இரும்புப் பெட்டி, இரும்புக் கூடு, சுருக்குக் கேற் ஆதியன விற்பனைக்குண்டு. தொடர்பு: திரு. செ. பொன்னம்பலம், 405, K. K. S. வீதி, யாழ்ப்பாணம். 965

நல்ல பராமரிப்பில் உள்ள கினே மோட்டோ உழவு யந்திரம் விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்க: விளம்பர இல: 981, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம் 981

7 3 க. அடி எலக்ரலக்ஸ் (Electrolux) குளிர்சாதனப் பெட்டி குறுகிய காலம் மட்டுமே பாவித்தது. விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு: ஆர் எஸ். நத்தானியல், No. 36, சென் ஜோன்ஸ் லேன், (ஆஸ்பத்திரிவீதிப் பக்கமாக) யாழ்ப்பாணம். 985

## FOR SALE

Ford Cortina 1972 Model 1300 C. C. Blue Colour Re-Condition 8 Sri 5904 in top in Conditioned Inspection between 9 a. m. to 5 p. m. on Sunday at M. Balasingham No. 1, Railway Bungalow, Stanley Road, Jaffna. 990

## விற்பனைக்கு

வல்வெட்டித்துறை சிவன் கோவில் வீதியிலுள்ள ''கலா பவனம்'' வீடும்' காணியும் (சகலவசதிகளுடன்) விற்பனைக் குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். 910

Northtown 4 நாள் சேவல் குஞ்சு 1-65 வெள்ளை பேட்டுக் குஞ்சு 8-75 குறஸ் பிறலேஸ் 4-50. ''ராதாகிருஷ்ணுஸ்'' 392, நாவலர் ரோட், கயிலாச பிள்ளையார் கோவிலடி. யாழ்ப்பாணம், [921]

## குத்தகைக்கு

சகல வசதிகளைக்கொண்ட கடை ஒன்று சாவகச்சேரியில் குத்தகைக்கு உண்டு. விபரங்கட்கு: செ. மரியநாயகம், 241, கண்டிவீதி, சாவகச்சேரி. (941)

## தேவை

மி வும் நல்ல நிலையிலுள்ள A/30 அல்லது A/35 கார் உடன் தேவை. தொடர்பு: 46, றக்கா ஒழுங்கை, சுண்டிக்குழி. (947)

இரவு காவல்காரர் தேவை. நற்குணமும், ஆங்கில அறிவும் உள்ள இளைப்பாறிய பொலிசார் விரும்பப்படுவர். நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் விண்ணப்பிக்கவும். எல்பிகெம் வாளித் தொழிற்சாலை, மாவிட்டபுரம், தெல்லிப்பளை. 992

கிரைன்டிங் மில்லில் கைவேலை செய்யக்கூடிய சிறு பையன்கள் தேவை. சாப்பாடும் தங்குமிடவசதியும்உண்டு. நேரில் வரவும். மஞ்சு கிரைன்டிங் மில், புளியங்கூடல் சந்தி, ஊர்காவற்றுறை யாழ்ப்பாணம். 980

## வாடகைக்கு

கிளிநொச்சி பஸ் நிலையத்துக்கு அண்மையில், கண்டி வீதியில் புதிதாகக் கட்டப்படும் 7 கடைகள் வாடகைக்கு உண்டு. தொடர்பு: V இராசலிங்கம். 61, மருதடி வீதி, யாழ்ப்பாணம். 979

பலாலி வீதி ஊரெழுவில் கடைக்கும் போதனுநிலையத்திற்கும் 'உகந்த கட்டிடம் வாடகைக்குண்டு. தொடர்பு; சி. குணேந்திரம் ஊரெழு கிழக்கு உடையார் வீதி 949

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை புலோலி கிழக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி பாலசிங்கம் என்பவரின் மரணசாதனமில்லாத சொத்து விடயத்தில்:-

மரணமெய்தியவர்

**பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்**

பாலசிங்கம் சிவச்செல்வம், புலோலி கிழக்கு, பருத்தித்துறை.

மனுதார்

மரணசாதன நியாயாதிக்க வழ இல. [illegible]

எதிராக

1. பாலசிங்கம் சிவநேசன்
2. பாலசிங்கம் சிவகுமார் இருவரும் புலோலி கிழக்கு, தற்காலம் சவூதியரேபியா தமது சகோதரனும் அற்ரேனித் தத்துவகாரனுமாகிய மேற்குறித்த மனுதார் மூலம் தோற்றம்,
3. பாலசிங்கம் மகள் சிவகுமாரி
4. சிவகுருநாதன் நாகேந்திரன்
5. பெண் சிவசோதி புலோலி கிழக்கு பருத்தித்துறை,

எதிர்மனுதார்கள்

மேலே உள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கில் மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1984-ம் ஆண்டு ஆடி மாதம் 27-ம் நாள் அன்று முற்பகல் 10.30 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை [illegible] முற்றுன தாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்ருர்.

1984-ம் ஆண்டு ஆனி மாதம் 21-ம் திகதி.

மன்றின் கட்டளைப்படி

**றிச்சேட் ஜெயராசசிங்கம்**
பதிவாளர்

வரைவு
**செல்வி V .மகாதேவா**
மனுதாரின் சட்டத்தரணி
995

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## வாடகைக்கு

மானிப்பாய் கட்டுடையில் மூன்று அறைகள், குளிக்கும் அறை, மின்சார நீர்வசதிகளுடன் நல்லசுற்றுடலில்பிரதான வீதியிலிருந்து 300யார் தூரத்தில் வீடு உண்டு. தொடர்பு: விளம்பர இல 957 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். 957

## கல்வி

G.C.E.(O/L)மாணவர்கட்கு ஆங்கில இலக்கண, இலக்கியம் (Literature), ஆங்கிலப் பேச்சு தனிப் பட்டமுறையாக ஆரம்பத்திலிருந்து கற்றுக் கொடுக்கப்படும். ச. குமாரவேலு, அதிபர், இன்ஸ்பெக்டர் குருசாமி இல்லம், ஒட்டுமடம், யாழ்ப்பாணம்.(961)

## பிற்போடப்பட்டது

21-7-84 சனிக்கிழமை (இன்று) நிகழவிருந்த யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்த கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தினுல் பிற்போடப்பட்டுள்ளது.

இராஜா விசுவநாதன்
தலைவர்,
(986) யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்,

கொக்குவிலில் 5-7-84-ல் கொள்ளையடிக்கப்பட்ட
38 ஸ்ரீ 4566 இலக்க
## டெலிக்கா வான்
இதுவரை கிடைக்கவில்லை.
விபரம் தெரிந்தவர்கள்
தயவுசெய்து தொடர்புகொள்ளவும்
**ஏ. என். திருக்குமாரன்**
396, நாவலர் வீதி, (கைலாயபிள்ளையார்கோவிலடி)
யாழ்ப்பாணம். 988

## [illegible]
## (CASHIER)

யாழ். நகரில் உள்ள வரையறுக்கப்பட்ட கொம்பனிக்கு வங்கி அனுபவம் உள்ள இளம் காசாளர் தேவை.

விண்ணப்ப முடிவு திகதி 30-07 84
விளம்பர இல. 126
ஈழநாடு லிமிட்டெட் — யாழ்ப்பாணம்

## சத்தியம் புத்தகசாலை

இப்பொழுது
இல. 5, 2-ம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி,
(உப தபாற் கந்தோர் அருகாமையில்)
யாழ்ப்பாணம்
என்னும் முகவரியில் செயல்பட்டுவருகின்றது!

**எமது புதிய வெளியீடு**
சத்திய வசனம் பாடல்கள்-8 (இசைக்கதிர்)
(சத்தியவசனம் கசெற்றுகளுக்கு யாழ் நகரில் விற்பனை உரிமை, சத்தியம் புத்தகசாலையினருக்கு மட்டுமே உண்டு.
தயவுசெய்து வேறு இடங்களில் அவற்றைப் பெற்றுக்கொள்வதன்மூலம் உரிமையற்ற செயல்புரிய எவரையும் உற்சாகப்படுத்தவேண்டாம்.)

**ஒய்வு நாட் பாடசாலைகளுக்கு**
சகல திருச்சபையினரும் பயன்படுத்த உகந்த ஆசிரியர்களுக்கான, மாணவர்களுக்கான எமது புத்தகங்களை உபயோகிப்பதன்மூலம், உங்கள் வகுப்புக்களை ஒழுங்குமுறையில், இலகுவாக நடத்தலாம்!

இன்றே உங்கள் கிறிஸ்தவ, [illegible] கெசற், புத்தகங்கள், ஸ்டிச்சா[illegible] வசன அட்டைகள் போன்றவற்றிற்கு எம்மிடம் விஜயம்செய்யுங்கள்!
971

கலர் பிலிம் சுருள்களை Processing & Printing, 24 படங்களுக்குக் குறையாது செய்து கொண்டால், ஒரு கலர் பிலிம் சுருள் இனமாக வழங்கப்படும், Processing ரூபா 30/- Printing. P.C ஒருபிரதி ரூபா 6.50,

**கொழும்பு ஸ்ருடியோ**

## பற்றீசியன் இன்ஸ்ரிரியூட்ஸ்

கீழ் குறிப்பிட்டிருக்கும் வகுப்புகட்கு இன்னும் சில வெற்றிடங்கள் உள்ளன.

**இவ்வகுப்புகள் 1-8-1984-ல், ஆரம்பமாகும்.**

- ★ மோட்டார் மெக்கானிஸம் (MOTOR MECHANISM)
- ★ கொம்பியூட்டர் புரோகிராமிங் (COMPUTER PROGRAMMING)
- ★ படம் வரைதல்— பில்டர்ஸ் குவாண்ரிற்ரீஸ் உட்பட (DRAUGHTSMANSHIP- INCLUSIVE OF BUILDERS QUANTITIES)
- ★ எலெக்ரோனிக்ஸ் (ELECTRONICS)
- ★ றெவ்றிஜறேஷன் (REFRIGERATION)
- ★ மின்இணைப்பு (ELECTRICAL WIRING)
- ★ நீர் குழாய் இணைப்பு (PLUMBING)

இவ் நிறுவனத்தில் விற்கப்படும் விண்ணப்பப் பத்திரத்தில் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்,

28-07-84க்கு முன் விண்ணப்பித்து, ஏமாற்றத்தைத் தவிர்க்கவும்.

பதிவாளர்
**பற்றீசியன்இன்ஸ்ரிரியூட்ஸ்**
59, சென் பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

# குளோபல் ரெலிபோன் சேவை
இப்பொழுது
# உங்களை வீடுவரை தேடி வருகிறது
குளோபல் ரெலிபோன்: 23015, 23312, 23249

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அதிபர் ரீகன் ஆபத்தான இராணுவ நடவடிக்கையாளர்!"

## உபஜனாதிபதி வேட்பாளர் ஜெரால்டின்பெரர் கூறுகிறார்

வாஷிங்டன், ஜூலை 20

"அமெரிக்க ஜனாதிபதி திரு. றொனல்ட் றீகன் ஒரு ஆபத்தான இராணுவ நடவடிக்கையாளர். அவரின் கொள்கைகள் வறியவர்களுக்கும் பெண்களுக்கும் பாதகமானவையாகும்" என்று திருமதி ஜெரால்டின் பெரர் கூறினார்.

சான்பிரான்ஸிஸ்கோவில் இடம்பெற்ற ஜனநாயகக்கட்சி வேட்பாளர் தெரிவில் திரு. வோல்ட்டர் மொன்டேல் அக்கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராகத் தெரிவுசெய்யப்பட்டார். இதைத்தொடர்ந்து திரு. மொண்டேல் திருமதி ஜெரால்டின் பெரரை தமது துணைப் போட்டியாளராகவும், உபஜனாதிபதிப்பதவிக்கான வேட்பாளராகவும் அறிவித்தார்.

இவ்வறிவிப்பையடுத்து திருமதி [illegible] உரையாற்றிய போதே மேற்[illegible] அவர் அதிபர் றீகனைக் கண்டித்துப் பேசினார்.

"திரு றொனல்ட் றீகனின் இராணுவ ரீதியிலான நடவடிக்கைகள் மிகவும் ஆபத்தானவை. செல்வந்தர்களே அவரின் கொள்கைகளால் நன்மையடைகின்றனர். வறியவர்கள் பாதிக்கப்படுகின்றனர். திரு. றீகன் பெண்கள் விவகாரங்கள் தொடர்பிலும் ஆண்களுக்கே சாதகமாகவிருக்கிறார்." என்றும் திருமதி ஜெரால்டின் பெரர் தெரிவித்தார்.

திரு. வோல்ட்டர் மொன்டேலும் அதிபர் றொனல்ட் றீகனை காரசாரமாகக் கண்டித்துப் பேசியதுடன், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் றீகன் நிர்வாகம் தோற்கடிக்கப்படுவது நிச்சயம் என்று கூறினார்.

திருமதி ஜெரால்டின் பெரரே அமெரிக்க உபஜனாதிபதியாகப் போட்டியிடும் முதலாவது பெண்மணியாவார். இவர்இத்தாலியிலிருந்து அமெரிக்கா வந்து குடியேறிய ஒரு குடும்பத்தில்பிறந்தவர்.

பள்ளி ஆசிரியையாகத் தமது

(6ம் பக்கம் பார்க்க)

# இந்திராவின் மேடையை நோக்கி கத்தியுடன் இளைஞன்!

## பொதுமக்கள், பாதுகாப்பு அதிகாரிகள் மடக்கிப் பிடித்தனர்

ஹைதராபாத், ஜூலை 20

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி உரை நிகழ்த்திக் கொண்டிருந்த மேடையை நோக்கிக் கத்தியுடன் சென்ற இளைஞன் ஒருவன் மடக்கிப் பிடிபட்டான்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் தெற்கு ஆந்திரா மாநிலத்திலுள்ள இடமொன்றில் இடம்பெற்றது.

இங்கு திருமதி இந்திரா காந்தி பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றினார். அப்போது அவர் நின்றுகொண்டிருந்த மேடையை நோக்கிக் கத்தியொன்றுடன் இளைஞன் ஒருவன் சென்றபோது பொதுமக்களாலும், பாதுகாப்பு, அதிகாரிகளாலும் அந்த இளைஞன் மடக்கிப் பிடிக்கப்பட்டான்.

பொலிசார் தற்போது அவ்இளைஞனை விசாரித்து வருகின்றனர். இந்திராவுக்கும் அவரது சகாக்களுக்கும் அண்மையில் கொலை மிரட்டல்கள் விடுவிக்கப்பட்டது தெரிந்ததே. இம்மிரட்டல்களைத் தொடர்ந்து அவர் மீதான பாதுகாப்புகள் அதிகரிக்கப்பட்டுள்ளமைகுறிப்பிடத்தக்கது (கி)

### திருவனந்தபுரத்தில்

# இந்திய தெற்கு பிராந்திய விமானப்படைத் தளம்!

## இந்திரா திறந்து வைத்தார்

திருவனந்தபுரம், ஜூலை 20

இந்திய தெற்குப் பிராந்தியத்துக்கான புதிய விமானப் படைத் தலைமையகம் கேரள மாநிலத்தின் திருவனந்தபுரம் நகரில் அமைக்கப்பட்டுள்ளது. இதனை பிரதமர் திருமதி இந்திரா காந்தி உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தார்.

இவ்விமான படைத் தலைமையம் முன்னர் 'தாம்பரம்' என்ற தமிழ் நாட்டின் நகரிலேயே இயங்கி வந்தது. தற்போது இது திருவனந்தபுரத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

திருவனந்தபுரத்தில் அமைந்துள்ள தெற்குப் பிராந்திய விமானப் படைத்தளம், இந்தியாவின் மிகமுக்கிய கடற்படைத் தளங்களில் ஒன்றான கேரளத்தின் கொச்சின் கடற்படைத்தளத்துடன் இணைந்தே செயல்படும் என்று கூறப்பட்டன.

இப் புதிய விமானப் படைத் தளத்தில் எத்தகைய விமானங்கள் நிறுத்தப்படும் என்று தெரிவிக்கப்படவில்லை. இந்து சமுத்திரப் பகுதியில் கண்காணிப்பு வேலைகளை அதிகரிக்கும் ஒரு நடவடிக்கையே இப் புதிய தளத்தின் ஆரம்பம் என்று கூறப்பட்டது. (கி)

# ஆர்ஜன் - பிரிட்டன் பேச்சுக்கள் முறிவு!

பேர்ண், ஜூலை 20

பிரிட்டனுக்கும், ஆர்ஜன்டீனாவுக்குமிடையே ஆரம்பமான முதலாவது சமரசப் பேச்சுவார்த்தைகள் முடிவடைந்துள்ளன.

சுவிற்சலாந்தின் பேர்ண் நகரில் இப்பேச்சுக்கள் மூன்று தினங்களுக்கு முன்னர் ஆரம்பமாயின. சுவிற்சர்லாந்து அரசாங்கம் நடுநிலையாளராக விளங்கியது.

இச்சமரசப் பேச்சுக்களின் போது 'போக்லண்ட்' தீவு தனக்கேயுரியதென ஆர்ஜன்டீனா உரிமைபாராட்டியது. இதனைத் தொடர்ந்தே பிரிட்டன் இப்பேச்சுக்களை முறித்துக் கொண்டது,

ஆர்ஜன்டீனாவும் பிரிட்டனும் 1982-ம் ஆண்டு போக்லண்ட் [illegible]த்தையடுத்து [illegible] உறவை முறித்துக் கொண்டன, தொடர்ந்து இச்சமரசப் பேச்சுக்கள் மூலம் மீண்டும் நட்புறவை ஏற்படுத்த முயற்சிக்கப்பட்டது.

போக்லண்ட் தீவுகளை ஆர்ஜன்டீனா உரிமை கோரமுடியாது என்று பிரிட்டன் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. போக்லண்ட்தீவு பற்றிய பிரஸ்தாபிக்காது பேச்சுக்களைத் தொடருவதில் பலனில்லை என்று ஆர்ஜன்டீனா தெரிவித்தது, (கி)

# 'இரண்டாவது சபை அர்த்தமற்றது'

## குமார் கருத்து

(கொழும்பு)

"மத்திய அரசிலிருந்து விலகிய ஒரு அமைப்புமுறையையே தமிழ் மக்கள் விரும்புகிறார்கள். மீண்டும் மத்திய அரசுடன் இணைந்ததான இரண்டாவது சபையை அமைப்பது அர்த்தமற்றது" என்று அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் கருத்து வெளியிட்டார்.

உத்தேச இரண்டாவதுசபை அமைப்பதை தமது கட்சி பலமாக எதிர்க்கும் என்றும் அவர் கூறினார்.

"இந்த இரண்டாவது சபைகள் சிலருக்கு பதவிகளை கொடுக்குமே ஒழிய தமிழ்மக்களுக்கு எந்தவித பயனையும் ஏற்படுத்தாது" என்று தெரி

(6ம் பக்கம் பார்க்க)

# பொற்கோயில் திருத்த வேலைகளுக்கு சீக்கிய மதகுருமார்கள் கண்டனம்!

புதுடில்லி, ஜூலை 20

பொற்கோயிலில் திருத்த வேலைகளை மேற்கொண்டுவரும் சீக்கிய மதத்தலைவரான பாபா சந்தாசிங்கை வேறு ஐந்து பிரதான சீக்கிய குருமார்கள் கண்டித்துள்ளனர்.

இவர்கள் பாபா சாந்தச்சிங் மேற்கொள்ளும் திருத்தவேலைகளைக் குற்றச்செயல்கள் என்று குறிப்பிட்டுள்ளதுடன் அவரை தம்மிடம் ஆஜாராகும்படியும் தெரிவித்துள்ளனர்.

பாபாசாந்தாசிங்கின் பொற்கோயில் புனருத்தாரண வேலைகளைத் தடைசெய்யும்படி பஞ்சாப், ஹரியானா உயர் நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது. ஆனால் அம்மனுவை அந் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

பாபா சாந்தாசிங் தமது பணியை எவராலும் கட்டுப்படுத்த முடியாது என்று தெரிவித்துள்ளார். இதேவேளை நேற்று பல குழந்தைகள், பெண்கள் உட்பட நூற்றுக் கணக்கானவர்கள் பொற்கோயில் திருத்த வேலைகளில் ஈடுபட்டனர். இவ்வேலைகளில் கலந்துகொள்ளவென மேலும் பலர் பஞ்சாப் கிராமப் புறங்களிலிருந்து வரவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (கி)

## சித்தமருத்துவத்துறை ஆலோசக சபை

(பண்டத்தரிப்பு)

யாழ். பல்கலைக்கழகத்தில் அண்மையில் புதிதாக ஆரம்பித்து வைக்கப்பட்ட சித்த மருத்துவத்துறையின் ஆலோசனைச் சபை உறுப்பினர்களாக பின்வருவோர் நியமிக்கப்பட்டுள்ளனர்:- டாக்டர் எஸ்.பி. இன்னாசித்தம்பி, டாக்டர் திருமதி இந்திராணி சத்தியநாதன், டாக்டர் இராமசாமி, டாக்டர்சுப்பிரமணியம்பவானி இவர்களுடன் யாழ்.பல்கலைக் கழகத்தின் மருத்துவ, விஞ்ஞான' கலைப்பீடாதிபதிகளும் [illegible] ளனர்.

அதிர்ச்சி ஆனால் உண்மை

காகிதாதிகள்

பாடசாலை உபகரணங்கள்,
மின்சாரப் பொருட்கள்,
அழகுசாதனப் பொருட்கள்,

யாழ். நகரில் குறைந்த விலையில் தரமான பொருட்களை வழங்கும் ஒரே ஸ்தாபனம்

அம்பலவாணர் அன் சன்ஸ்

(கடைத்தெரு பிள்ளையார் கோவில் முன்பாக)
196, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 24291

✶ தூய அலுமினியம் ✶ பிளாஸ்டிக்
✶ எவர் சில்வர் ✶ எனமல்
✶ கண்ணாடி ✶ தாச்சி வகைகள்
✶ ஒக்கிட் (ORCHID) வாளிகள்

போன்ற பொருட்கள்,
மங்கள வைபவங்களுக்கு உகந்த
அன்பளிப்புப்பொருட்கள் யாவும்

குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

வியாபாரிகளுக்கு எமது உற்பத்திப் பொருட்களும், மற்றும் எனமல், பிளாஸ்டிக், ஒக்கிட் வாளிகளும் விசேட கழிவுடன் வழங்கப்படும்.

உங்கள் வசதி கருதி ஹோம் பினன்ஸ் சொகுசு பஸ் ஆசனங்கள் எம்மிடம் பதிவு செய்து கொள்ளலாம்.

நியூ லங்கா அலுமினியம் தொழிற்சாலை
(விற்பனைப் பிரிவு)
இல. 6, 30, ஆஸ்பத்திரி வீதி, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
போன்: 23596

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

தான் கூவுவதைக் கேட்பதற்காகவே சூரியன் உதிக்கிறான் என்று கோழி நினைக்குமானல் அதுதான் அகந்தை,

— ஜோர்ஜ் எலியட்

# நமது நோக்கு

## எங்கே தலையங்கம்?

கடந்த திங்கட்கிழமை (16-7-84) எங்கள் பத்திரிகையில் வெளியானசென்னை ஹிந்துப் பத்திரிகையின் 7ம் தேதி ஆசிரியர் தலையங்கத்தை வாசகர்கள் நினைவில் வைத்திருப்பார்களெனநம்புகின்றோம்.

கடந்த காலங்களில் இது போன்ற கருத்துச்செறிந்த கட்டுரைகள் ஹிந்து பத்திரிகையில் வெளிவந்தபோதெல்லாம் அவற்றைத் தமிழில் வெளியிடுவதுஎமது வழக்கம்.

எமது பத்திரிகை மட்டுமல்ல கொழும்பு ஆங்கிலத் தினசரிகள், குறிப்பாக சிலோன் டெயிலி நியூஸ், மிக ஒழுங்காக அவ்வித தலையங்கங்களை வெளியிட்டு வந்தன.

நாம் குறிப்பிடும் ஆசிரியர் தலையங்கத்தை நாம் பிரசுரிப்பதோடு நின்றுவிட்டோம்; அதற்கொரு குறிப்பென்றல்பொன்னின் குடத்துக்கு பொட்டிடுவதுபோல் தோன்றினது.

இன்னொரு காரணம்; நியாயமான கருத்துக்களும், தகவல்களும் நிறைந்த இத் தலையங்கம் - 'இலங்கையில் தொடரும் அரசியல் நெருக்கடி' இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு சாதகமாகவிருந்ததால் வேலிக்கு ஓணன் சாட்சியென்ற கேலிக்கிடமளிக்கலாகாதென்பது.

இந்தியாவின் தேசியப் பத்திரிகைகளில் 'ஹிந்து' முன்னணி வகிப்பதை யாரறியார்? காலஞ்சென்ற பிரதமர் நேரு உலகின் பிரபல பத்திரிகைகளில் ஹிந்துவை ஒன்ருகக் கணித்திருந்தார்.

முதலாளித்துவமும் சோஷலிசமும் இரு துருவங்களென்று நாம் கருதினலும் இவற்றிற்கு நடுவே இரண்டு அம்சங்களும் அமைந்த அரசியல் இந்தியா போன்ற நாடுகளுக்கு உகந்ததென்ற கொள்கை 'ஹிந்து' கடைப்பிடித்து வருவதாகக் கருதப்படுகிறது.

முதலாளித்துவத்தின் குரல் என்று 'ஹிந்துவை வசைபாடுபவர் பலருண்டு. அது என்னவானலும் பெருமளவிற்கு அரசியலில் பக்கம் சாராது எடுதத விடயத்தில் நடுநிலைமை வகித்து ஆழமான அகலமான கருத்துக்கள் வழங்குவதில் ஹிந்துவுக்கு நிகரான தேசிய பத்திரிகைகள் மிகச் சிலவே.

எங்கள் நாட்டைப் பொறுத்தளவில், இன்றைய ஆட்சி பதவிக்கு வந்தகாலம் தொட்டு தமிழர் பிரச்னை எவ்வாறு சமாதானமாகத் தீர்க்கலாமென்ற ரீதியில் பல ஆசிரிய தலையங்கங்கள் எழுதிவந்தது.

நாட்டின் ஒருமைப்பாட்டை வற்புறுத்தி வந்த இப்பொறுப்புடைய வெளியீடு இன்றுவரைக்கும் தமிழருக்கு தனி நாடு என்பதை ஆதரிக்கவில்லை யென்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும்.

அத்துடன் பலவித சமாதான பேச்சுக்கள் இங்கு நடந்த போதெல்லாம் எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் பிடிவாதமாக விருக்கிறரெனக் கண்டித்து தமிழ்த் தலைவர்கள் இன்றைய ஆட்சிக்கு பலமளிக்கும் அளவிற்கு தங்கள் கோரிக்கைகள் நிறைவேறும் சாத்தியம் உண்டென்றும் கருதி வந்தது.

இவ்வித தலையங்கங்கள் கட்டுரைகள் எங்கள் பத்திரிகையில் தமிழாக்கம் செய்யப்படாத போதிலும் 'இலங்கை டெயிலி நியூஸ்' நடுப்பக்கத்தில் மிகப் பிரபலம் அளித்து வெளியிட்டு வந்தது அப்பத்திரிகை வாசகர்கள் நன்கறிந்ததே.

கடந்த புதன்கிழமை (18-7-84) என்ன நடந்தது? நாம் குறிப்பிட்ட தலையங்கம் டெயிலி நியூஸ் பத்திரிகையில் வெளிவரவில்லை; ஆனல் அதனை மிகக் கீழ்த் தரமான முறையில் கண்டித்து 'அவமதிக்கும் கருத்துரை' என்ற தலைப்பில் அன்றைய ஆசிரியர் தலையங்கம் அள்ளி வீசுகின்றது.

பத்திரிகாதர்மம் ஒடி மறைந்துவிட்டது. கண்டனம் தெரிவிக்கும் உரிமை உண்டு; ஆனல் வாசகர்களுக்கு என்ன விடயம் விமர்சிக்கப்படுகிறதென்பது தெரிய வேண்டுமே.

அரசு சார்புடைய 'டெயிலி நியூஸ்' இவ்வித அதர்ம விடயங்களில் இறங்கத் தயங்குவதில்லை; ஏனென்றல் எவ்வகையிலும் ஆட்சிக்கு பங்கம் விளைவிக்கும் கருத்துக்கள் வெளிவருவதைச் சகிக்கும் மனப்பலம் அதற்கில்லை.

கண்டனத்தில் வழங்கப்பட்ட கருத்துக்களின் சாராம்சம்:

இன்று தமிழ் இளைஞர்கள் பயங்கரவாதிகளே. கொலைகாரர் இத்தனை தீங்குகள் நடத்திவிட்டு தமிழகத்தில் தஞ்சம்புகுந்திருக்கின்றனர்; இவர்களை விடுதலைப் படையென்று கூறலாமா?

ஹிந்துவின் தலையங்கம் இவ்வளவு தூரம் போகவில்லை. அரசியல் தீர்வு நெடுங்கால ஏமாற்றமாகிவிட்டதை கண்டு விரக்தியடைந்த இளைஞர் கூட்டம் போர்க்கோலம் கொள்வது வரலாற்றின் படிப்பினையென்று சாந்தமாகக் கூறியிருந்தது.

உண்மை நிலைக்குதவும் உதவ வேண்டிய பத்திரிகை ஒன்று இவ்வாறு திரித்துத் தன் ஆவேசம் அனைத்தையும் கக்கினல் ஆட்சிக்கு இது நன்மையா?

### இலட்சார்ச்சனை விழா

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீ துர்க்கை அம்மன் தேவஸ்தான இலட்சார்ச்சனை விழா இம் மாதம் 22ம் தேதி ஆரம்பமாகி இம் மாதம் 31ம்தேதி வரை தொடர்ந்து நடைபெறும் இலட்சார்ச்சனை வைபவம் சிவஸ்ரீ கி. சோமசுந்தரக் குருக்களினல் நடத்தப்படும். (கு)

# முகாமைத்துவம்: அன்றும் இன்றும்

**என். விசுவநாதன்**

முதலாளி, முகாமையாளர் என்றெல்லாம் பிரிவுபடுத்தி ஒரு மாபெரும் ஸ்தாபனம் இயங்குவது இக்காலத் தொழில் வளர்ச்சியின் இலக்கணம்.

பண்டைக் காலத்தில் ஏன் சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன் இந்நாட்டில், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தொழில் என்னவென்ருலும் குடும்ப ஆதிக்கத்திலும், அடிப்படையிலும் இயங்கி வந்தமை இன்றைய இளைஞர் உலகம் அறிந்திராது.

கப்பல் தொழிலென்ருலென்ன, கடைத் தொழிலென்ருலென்ன அதுகுடும்ப அடிப்படையில் உதயமாகி வளர்ச்சியடைந்து இன்று பெரும் ஸ்தாபனமாக வளர்ந்திருப்பது கண்கூடு.

ஆரம்பத்தில் ஒருகடை முதலாளி, தமக்குத் தொழிலாளிகளைச் சேர்க்கும் போது, அவர்கள் ஒரு தனிப்பட்ட வர்க்கமென்ற கருத்தைக் கொண்டிருக்கவில்லை, முதல் கொண்டு தொடங்கும் தொழில் அவருடைய தானதால் அதுவளர்ச்சியடைந்த நிலையில் அவர் 'முதலாளி' என்று அழைக்கப்பட்டது எமது கவனத்துக்குரியது.

தம்முடைய ஆற்றலும் அனுபவமும், தம்முடைய சகாக்களினது ஆற்றலும் ஒத்துழைப்பும் தொழிலின் வளர்ச்சிக்கு இன்றியமையாதமையை உணர்ந்ததால், முதலாளி தொழிலாளிஎன்றபாகுபாடும், வேதனப் பிரச்னையும் அன்று தலை தூக்கவில்லை.

முதலாளியே முகாமையாளருமானதால் அவருடைய உடைநடை பாவனை ஊழியர்களைவிட வேறுபட்டிருக்கவில்லை. ஒன்ருகச் சமைத்துச் சாப்பிட்டு, ஒரே விதமான எளிமை வாழ்க்கை நடத்தி காலகதியில் கோடீஸ்வரராக வந்த காலை, அதே விதமான வாழ்க்கை வாழ்ந்த பெரியவர்களையும் இந்த நாடு கண்டிருக்கிறது.

இது நெடுங்காலம் தொடர முடியாதிருந்தது நாமறிந்த உண்மை.

தனிப்பட்ட ஸ்தாபனங்கள் அசாதரண வளர்ச்சியடைந்த நிலையில், ஊழியர், சிப்பந்திகள் அதிகரித்து வந்தமையால் வருமானத்துக்கேற்றமுறையில் ஊழியர் சம்பளம் காலத்துக்கேற்றவகையில் வழங்கப்படவில்லை, தொழிலாளிகள் மிக விசுவாசமாக நடந்தபோதும் அவர்களின் உரிமையை உள்ளவாறு உணரும் போக்கு முதலாளிகளுக்கு இலகுவில் புலப்படவில்லை,

மேனாட்டு தொழிற் சங்க சித்தாந்தம் இந்த நிலைக்கு விளக்கமளித்ததுடன், தொழிலாளரின் ஒற்றுமை வலிமை பெறுவதால் அவர்களின் உரிமை கிடைக்குமென்ற உறுதியை போதித்ததுமல்லாமல், நடைமுறையிலும் பரீட்சித்து வெற்றிபெற்ற அனுபவத்தாலும் தொழிற் சங்க பலம் அதிகரித்து வந்திருக்கிறது.

இன்று வியாபாரம், வர்த்தகம், பெருந்தொழில், எதனை எடுத்தாலும் அன்றுபோல்

(5ம் பக்கம் பார்க்க)

# உள்ளூராட்சி தட்டெழுத்தாளர் சேவை ஆட்சேர்ப்பு போட்டிப் பரீட்சை:

**வ. சிவச்சந்திரதேவன்**

> இம்மாதம் 28ம்திகதி நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தட்டெழுத்தாளர் சேவை (தமிழ்/ஆங்கிலம்) ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்குப் பயன்அளிக்கக்கூடியவகையில் இக்கட்டுரை எழுதப்படுகிறது.

இப்பரீட்சை இரு பிரிவுகளாக நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. பகுதி; (அ) தட்டெழுத்து விரைவுப் பரீட்சை. தமிழ்ப் பரீட்சார்த்திகளுக்கான குறைந்தவேகம் நிமிடத்துக்கு 20 சொற்கள். ஆங்கிலப் பரீட்சார்த்திகளுக்கான குறைந்த வேகம் நிமிடத்திற்கு 30 சொற்கள். இதற்கெனத் தரப்படும் பந்தியைத் தொடர்ச்சியாக 20 நிமிடங்களுக்குப் பொறிக்கவேண்டும்.

மேற்பார்வையாளர் விடையளிப்பதற்கான தாள்களை வழங்கியவுடன் அவற்றில் இரண்டை தட்டச்சுப் பொறியில் இட்டு (ஒன்று தட்டச்சுப் பொறிப்பதற்காகவும் மற்றது தட்டச்சுப் பொறி உருளையைப் பாதிக்காது இருப்பதற்காகவும்) சுட்டெண்ணைப் பொறிக்கவேண்டும். வினத்தாள் உமக்கு வழங்கப்பட்டதும் அறிவுரைகளைச் கவனமாக வாசிக்கவேண்டும். நீர் அளிக்கும் விடைத்தாளின் மேற்பக்கத்தில் ஒரு அங்குல இடைவெளியும் கீழ்ப் பக்கத்தில் அரை அங்குல இடைவெளியும் விடலாம். எல்லையாக (Margin) இடது பக்கத்தில் 10 இடைவெளிகளும் வலது பக்கத்தில்5 இடைவெளிகளும் விடலாம். பந்தியின் ஆரம்பத்தில் இடது பக்க எல்லையில் இருந்து 5 அல்லது 7 இடைவெளிவிடலாம். அறிவுரையில் வரிகளுக்கிடையே எவ்வளவு இடைவெளி விடவேண்டும் எனக் கூறியிருந்தால் அவ்வாறே செய்யவேண்டும் அல்லது சாதாரணமாக ஒன்றரை இடைவெளி விடலாம். விவேகப் பரீட்சையைச் செய்யும்போது ஓர் எழுத்தையேனும்தவறவிடாது முழுமையாகப் பொறிக்கவேண்டும். சொற்களைப் பொறிக்காதுவிட்டால் அல்லதுமாறிப் பொறித்தால் புள்ளிகளை வீணக இழக்க நேரிடும்.

### போட்டிப் பரீட்சை

இது ஓர் போட்டிப்பரீட்சை என்பதால் விரைவாகவும் அதே வேளை பிழைகள் இன்றியும் ஒழுங்காகப் பொறிப்பவர்கள் கூடிய புள்ளிகளைப் பெறலாம். முற்றுப்புள்ளி, சேள்விக்குறி, ஆச்சரியக்குறி ஆகியவற்றின்பின்னர் இரு இடைவெளிகள்விடவேண்டும். தவறுதலாக ஒரு இடைவெளிவிட்டால் இதுவும் பிழைகளில் ஒன்ருகவே கணிக்கப்படும்.

வசனங்களைப் பிரித்துப் பொறிக்கவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் பின் வருவனவற்றைக் கவனத்திற்கு எடுக்கவேண்டும்.

### பிரிக்கலாம்

உச்சரிப்புக்கேற்ற முறையில் (பாட-சாலை, வைத்திய.சாலை, win-dow-mer-t on).

கள், -ing போன்றவற்றிற்கு முன்பு இருந்தார்-கள் Sing-ing) ஆங்கிலப் பரீட்யைப் பொறுத்தவரையில் Except where the final consonant of a word is doubted for the addition of -ing, in which case the division is made between the double consonant: Set-ing. refer - ring)

தொடர்ச்சொற்கள் மத்தியில்:-

காலை-வணக்கம், good - morning.

### பிரிக்கக்கூடாது

ஒரு வசனத்தின் இறுதியில் இரு எழுத்துக்கள் இருக்கும் போது,

ஒரு சொல் அல்லது அதன் பகுதி, அங்கீகரிக்கப்பட்ட சுருக்கங்கள்.

பெயர்ச் சொற்கள் இலக்கங்களும் பணத்தொகையும்

பந்தியின் அல்லது பக்கத்தின் கடைசிச்சொல்.

விரைவுப் பரீட்சையை நீர் செய்து கொண்டிருக்கும் போது அதில் ஏதாவது பிழை ஏற்பட்டால் அதனைத்திருத்த முயற்சிக்கக்கூடாது. திருத்தப்பட்டால் அதற்கு எந்தவிதமான புள்ளிகளும் வழங்கப்படமாட்டாது ஆனல் உமது பிழையானசெயலுக்காகப் புள்ளிகளை இழக்கநேரிடும் ஆனல் உமது பிழையான செயலுக்காகப் புள்ளிகளை இழக்கநேரிடும்.

உமது வினத்தாளில் 'கொடுக்கப்பட்ட பந்தியை 20 நிமிடங்களுள்நீர்பொறித்து முடித்தால் அதை மீண்டும் அதேபக்கத்தில் பொறிக்குக' எனக்கூறப்பட்டிருக்கும், மீண்டும் பொறிக்கக்கூடிய சந்தர்ப்பம் உமக்கு ஏற்படின் அதே பக்கத்திலேயே தொடர்ந்து பொறிக்கவேண்டும். அதேபக்கத்தில் இடம் இல்லாதுவிடின் அதேதாளின் மறுபக்கத்திலேயே பொறிக்கவேண்டும் எச்சந்தர்ப்பத்திலும் வேறுதாளில் பொறிக்கக்கூடாது அப்போது முதல் பக்கத்தில்விட்ட எல்லைபோல் அல்லாது இடதுபக்கத்தில் 5 இடைவெளிகளும் வலது பக்கத்தில் 10 இடைவெளிகளும் விடவேண்டும். இதனைப்

(5ம் பக்கம் பார்க்க)

# மக்கள் கருத்து

### அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாசாலை

தங்கள் 16-6-84பத்திரிகையில் அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாசாலை அதிபர் பதவி தொடர்பான செய்திபடித்தேன். பாடசாலை அபிவிருத்திச் சங்க உபதலைவர் என்ற வகையில் உண்மை நிலையைத் தெளிவுபடுத்த இதனைத் தருகிறேன். இப்பாடசாலை அதிபர் இளைப்பாறி அவ்விடத்திற்குப் புதிய அதிபரை நியமிக்கும்படி பாடசாலை அபிவிருத்திச் சங்கம் கேட்டிருந்தது. அதற்கிணங்க வடமாநில வித்தியாபதி அவர்கள் புதிய அதிபராகத் திரு. பொ. நடராசா அவர்களை நியமித்து மாதங்கள் இரண்டு கழிந்து விட்டன அதிபர் தேவை தரம் III என்ற தேவையுமற்று எமது பாடசாலையில் அக்கறை கொண்டு நல்ல அதிபரைத் தந்துதவியமைக்கு பாடசாலை அபிவிருத்திச்சபை வடமாநிலக் கல்வி அதிபதிக்கு நன்றி பாராட்டுகின்றது.

**செ. இராசையா**
உ. தலைவர்
பா. சா. அ. சங்கம்
யா/ அல்லைப்பிட்டி
பராசக்தி வித்தியாசாலை,
அல்லைப்பிட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கிளிநொச்சி மக்களுக்கு

# கரைச்சி லயன்ஸ் கழகம் அளப்பரியபணி புரிந்துள்ளது

[கிளிநொச்சி]

''கரைச்சி லயன்ஸ் கழகம் ஆரம்பிக்கப்பட்ட ஒரு வருட காலத்தில் கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு அளப்பரும் சேவையாற்றியுள்ளது. சமுதாயத்தில் நலிவுற்ற மக்களின் நல்வாழ்வுக்காகக் குறுகிய காலத்தில் பெரும் சேவையாற்றியுள்ளது. இதையிட்டு நன்கு பெருமிதம் கொள்வதுடன், கரைச்சி லயன்ஸ்கழக நிர்வாகிகளையும் உறுப்பினர்களையும் பாராட்டுகின்றேன்.

இவ்வாறு கரைச்சி லயன்ஸ் கழகத்தின் புதிய நிர்வாகிகள் பதவி ஏற்பு வைபவத்தில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையில் லயன்ஸ் கழகப் பிரதி மாவட்ட ஆளுநர் சட்டத்தரணி எஸ். அம்பிகைபாலன் குறிப்பிட்டார்.

பரந்தனில் நடைபெற்ற இவ்வைபவத்தில் கரைச்சி லயன்ஸ் கழகப் புதிய தலைவராக திரு. யோசப் நாயகம் பதவி ஏற்றுக்கொண்டார். முன்னாள் கரைச்சி லயன்ஸ் கழகத் தலைவர் டாக்

(7ம் பக்கம் பார்க்க)

## முகாமைத்துவம்..

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்தாபனத்தின் சொந்தக்காரர் எதிலும் ஏகபோக உரிமை கொண்டாடும் சூழ்நிலைமறைந்துவிட்டது.

அரசாங்கத்தின் கட்டுப்பாடு அந்தந்தத்தொழிலிலும் காணப்படுகிறது. அவ்விதக்கட்டுப்பாடு ஆட்சிமாற்றத்தில் சிறு அளவிற்கு வேறுபட்டாலும் இருந்தேதீருமென்ற புதிய கட்டத்தில் தொழில்துறை இயங்குகின்றது.

இந்தமாற்றமடைந்த புதிய நிலையில் ஒருஸ்தாபனத்தை நிறுவியதனியாரோ அல்லது குழுவினரோ அதற்கொரு முகாமையாளரை நியமிப்பது தவிர்க்கமுடியாத நிலை எனவே இக்காலத்தொழில் துறைக்கு முகாமையாளரே அச்சாணி என்றும் குறிப்பிடலாம்

[illegible] ருக்கவேண்டுமென்பது ஒரு ஆராய்ச்சிக்கலையாகி விட்டது.

பண்டைக்காலம்போல் தமது சொந்த அல்லதுகுடும்ப அல்லது பரம்பரைஆற்றலை நம்பி எவரும் முகாமைத்துவத்திற்கு தகமையுடையவரென்று கணிக்கப்படுவதில்லை.

அதற்கென்றொரு பயிற்சி அவசியமாகிறது; அதற்குரிய ஆதாரக்கல்வியுடையவர் அவ்விதபயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு, படித்து பட்டம் பெற்று வெளியேறுகின்றனர்.

முகாமையாளர் என்றபதவி உடனேகிடைத்து விடுமென்று எதிர்பார்ப்பது மடைமை; அத்துடன் எத்துணைதிறமையுடையவரென்றாலும் நடைமுறைஅனுபவத்தில் படிக்க வேண்டியபாடங்களைப் பயிற்சி வகுப்பில் பூரணமாகப்பெற்றிருக்கமுடியாது.

தொழில்பற்றி அரசாங்கம் கொண்டுள்ள கொள்கைஎந்தத்திறமையுடைய முகாமையாளரையும் திணறவைக்கும்.

அரசாங்கத்தின் ஆதரவு, நட்புறவு தொழிலின் வளர்ச்சிக்கு அவசியம்; அதேசமயம் ஆட்சிக்குவாலுருவும் ஸ்தாபனம் குறுகியபார்வையில் பெருலாபம் ஈட்டினாலும் தூரநோக்கில் பழுதடையும் நிலையைஅடையலாம்

எனவே இன்றையதொழில் [illegible] உலகில்; அரசின் கொள்கை [illegible]

## உள்ளூராட்[illegible]

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

பரீட்சார்த்திகள் நன்கு கவனிக்கவேண்டும்.

தமிழ்மொழி மூலமான தட்டெழுத்துப் பொறித்தலில் எச்சந்தர்ப்பத்திலும் வரி ஆரம்பத்தில் க், ஞ், ண்...... போன்ற மெய்எழுத்துக்கள் வரலாகாது.

பகுதி 1 (ஆ) பொது அறிவுப்பரீட்சை-: இதில் இலங்கை- உலகவிவகாரங்களுடன் கூடியவினாக்கள் வரலாம். அத்துடன்தட்டெழுத்து சம்பந்தப்பட்ட அச்சகதிருத்தக் குறியீடுகள் proof correction marks) அங்கீகரிக்கப்பட்ட சுருக்கங்கள் (Recognized abbreviations) சம்பந்தப்பட்ட வினாக்களும் வரலாம். இதற்கேற்ற முறையில் பரீட்சார்த்திகள் தயாராகச் செல்லவேண்டும.

பகுதி II நேர்முகப்பரீட்சை

இதற்குப் பகுதி 1ல் போதியளவு உயர்ந்ததரத்தைப் பெறுபவர்கள் மட்டுமே அழைக்கப்படுவார்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே பரீட்சார்த்திகள் தினமும் சிறந்த பொறிகளில் விரைவுப்பயிற்சிகளில் ஈடுபடவேண்டு. அத்துடன் பயிற்சி பெறும் பொறியையே பரீட்சைக்கும் பாவிப்பது சாலச் சிறந்ததாகும் [illegible]

## ''கூட்டுறவு இயக்கங்கள் சரியாகஇயங்கினால்...''

(வண்ணார்பண்ணை)

''கூட்டுவு இயக்கங்கள் சரியாக நடந்தால் கூட்டுறவுத் திணைக்களம் இயங்கத்தேவையில்லை. ஏனைய கூட்டுறவு இயக்கங்களை விடஐக்கிய நாணய சங்கங்கள் இதுக்கு எடுத்துக் காட்டாகத்திகழ்கின்றன''

இவ்வாறு ஐக்கிய நாணய சங்கங்களின் சமாசவருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய யாழ்மாவட்ட கூட்டுறவு அபிவிருத்திஉதவி ஆணையாளர் ஜனாப் எம். சி, எம். இக்பால் தெரிவித்தார்.

## ரூபவாஹினி

மாலை

5-30 'பிஜ[illegible]ஸ்ரீட்' (ஆங்கிலம்)

5-[illegible] 'நியூ பைடர்மான்' [ஆங்கிலம்]

6- 5 சிறுவர் நிகழ்ச்சி [சிங்களம்]

6-55 செய்திகள் [தமிழ்]

7-15 ஆழ்கடல் ஆராய்ச்சி [ஆங்கிலம்]

8-15 செய்திகள் [சிங்களம்]

8-35 நாடகம் [சிங்களம்]

9-05 இசை நிகழ்ச்சி [சிங்களம்]

9-30 செய்திகள் [ஆங்கிலம்]

[7-ம் பக்கம் பார்க்க]

யென்னவானாலும் சோஷலிச சார்போ அல்லதுமுதலாளித்துவசார்போ, தொழிலதிபர்கள்தங்கள் முயற்சிக்கு ஈடுகொடுக்கும் வகையில், அரசாங்கதலையீடுகளையும் தொல்லைகளையும் முறியடிக்கவும், தொழிலாளியின் நலவாழ்வுக்கு ஏற்றவகையில் அன்றாட அலுவல்களை சமாளிக்கவும், எல்லாவற்றிற்கும் மேலாக ஸ்தாபனம்லாபத்தை நாடும்வகையிலும் பலதரப்பட்ட ஆற்றல் பெற்றமுகாமைத்துவத்தையே விரும்புவர்

இயற்கையிலே திறமையுடையவர்கள் தொழிலுக்கேற்றபயிற்சி பெற்று சமுதாயமாற்றங்களை மதிப்பிடும் அனுபவம் பெறுவதாலேயே இன்றைய உலகில் முகாமைத்துவத்தில் பூரணத்துவமுடையவராவார்.

# செய்திச்சிதறல்

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இச்சங்கத்தின் தலைவி திருமதி. வேதவல்லி கந்தையா தலைமையில் நடந்த இந்த வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் மன்னார் கூட்டுறவு ஆணையாளர் திரு எஸ். ஞானப்பிரகாசம், தேசியகூட்டுறவுச்சபை உதவிச் செயலாளர் திரு. க. கணேசலிங்கம் உட்பட பலர்கலந்துகொண்டனர்.

### பரிசுபெற்றோர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களதமிழ்ப்பண்பாட்டுக் கழகம் நடத்திய சிறுகதைப் போட்டியில் பரிசுபெறுவோர் விபரம் வருமாறு-:

முதலாம்பரிசு-: வரணியூர் கந்தசாமி பரந்தன்

இரண்டாம்பரிசு-:ச. முருகானந்தன் கரவெட்டி

மூன்றாம்பரிசு-: க. தாமரைச்செல்வி பரந்தன்

பாரட்டுப் பெறுபவர்கள்-: சி. எம். நவரத்தினம் நமுனுகுலை

வசந்தி கனகசபை திருநெல்வேலி

### பண்ணிசைப் போட்டியில் முதலிடம்

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை கல்விவட்டாரப் பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட பண்ணிசைப்போட்டியில் மேற்பிரிவில் தனிப்பாடல் போட்டியில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மாணவி செல்வி. விஜயரஜனி சிவப்பிரகாசம் முதலிடம் பெற்றுள்ளார். பண்டத்தரிப்பு மகளிர்கல்லூரியில் நடைபெற்ற மேற்படி போட்டியில் மத்தியபிரிவில் குழுநிலைப் பாடல்போட்டியிலும் இக்கல்லூரி முதலாமிடத்தைபெற்றது. மத்திய பிரிவில்தனி பாடல்போட்டியில் இதே கல்லூரியைச் சேர்ந்த செல்வி. மலர்விழி தவராசசிங்கம் முதலிடம் பெற்றுள்ளார்.

### சங்காபிஷேகம்

(வேலணை)

வேலணைகிழக்கு அருள்மிகு தவிடுதின்னிப்பிள்ளையார் ஆலயத்தின் மகாசங்காபிஷேக விழா இன்று சனிக்கிழமை ஆலயபிரதமகுரு. சிவஸ்ரீ பொன்னுச்சாமிக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

### கொலைவழக்கில் எதிரிபிணையில்

(வவனியா)

வவனியா வயிரவப்புளியங் குளம்ஜெயராஜா கொலைவழக்கில் எதிரியான மெய்யன் செல்வராஜா வவனியா மேல் நீதிமன்றத்தால் ஐயாயிரம் ரூபாபிணையிற் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தஎதிரிக்கு எதிராக 17-01- 1984 அன்று வவுனியா எம்பயர் ஹொட்டலுக்கு அருகில்வைத்து நமசிவாயம் ஜெயராஜா அல்லது மாஸ்டர் என்பவரைக் கத்தியால் குத்திக்கொலை செய்ததாக வவுனியா பொலிசார் தாக்கல் செய்தகொலை வழக்கு விசாரணை வவுனியா நீதவான் மன்றத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

அரசதரப்பில் அரசசட்டத்தரணி திரு. குரொசெட் தம்பையாவும் எதிரிசார்பில் சட்டத்தரணி திரு. கனகமனோகரனும் ஆஜராகியிருந்தார்கள்.

இப்பிணை உத்தரவு மேல் நீதிமன்ற நீதிபதி திரு. ஜே. ஜி. ஆசீர்வாதம் அவர்களால் வவுனியா நீதிவானுக்குப் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

### புனரமைப்புக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அராலி வடக்கு கிராம முன்னேற்றச் சங்கம் மீளப் பதிவு செய்வதற்கான புனரமைப்புக் கூட்டம் நாளைக் காலை சங்க மண்டபத்தில் நடைபெறும் திரு. செ. லோக செந்தில்நாயகம் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் சங்கானை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பொன் சிவானந்தன், உட்பட முக்கியமானவர்கள் கலந்துகொள்வார்கள்.

### சிகிச்சைநிலையம்

(மாவிட்டபுரம்)

வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கிராம அபிவிருத்தி மாதர் சங்கங்கள் புனரமைப்பு செய்யும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இயங்கும் மாதர் சங்கங்களும் கிராம அபிவிருத்திச் சங்கங்களும் கிராம அபிவிருத்தி அமைச்சின் புதிய சுற்றுநிருபம் யாப்புக்கள் ஆகியவற்றுக்கு அமைவாக புனரமைப்பு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.


# தொழிலாளர்கள் தேவை

பின்வரும் துறைகளில் மிகத் திறமையும் தேர்ச்சியும் உள்ள தொழிலாளர்கள் எங்கள் பாலன் இருப்புப் பெட்டகங்கள் (PAALAN IRON SAFES) அலுமாரிகள் (CABINETS) தயாரிப்பு தொழிற்சாலைக்கு உடன் தேவை.

**கடைச்சல் வேலையாட்கள் (Lathe Operators)**
**ஒட்டுனர்கள் (Welders)**
**பொருத்துனர்கள் (Fitters)**

விண்ணப்பதாரர்கள் மூன்று வருடங்களுக்கு குறையாத தொழில் அனுபவம் உள்ளவர்கள் ஆகவும், சுயமாக வேலை செய்யக்கூடியவர்கள் ஆகவும் இருத்தல் வேண்டும்.

வெளியூர் வேலையாட்களுக்கு இலவச தங்குமிட வசதியுண்டு. சாப்பாட்டு வசதியும் செய்து கொடுக்கப்படும்.

சம்பளம் பேச்சுவார்த்தை மூலம் தீர்மானிக்கப்படும். மிகத் திறமையுள்ளவர்களுக்கு கூடுதலான சம்பளம் வழங்கப்படும். ஓவர் ரைம் (OVERTIME) உண்டு.

விண்ணப்பம் செய்ய விரும்புவோர் நற்சான்றிதழ், கல்வித் தகைமை மற்றும் தேவையான பத்திரங்கள் உடன் இம்மாதம் 21, 22, 23-ம் திகதிகளில் (சனி, ஞாயிறு, திங்கள்) காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை எங்கள் தலைமைக் காரியாலயத்திற்கு நேரில் வரவும்.

**A.C. பாலன்**
பூட்டுப் பெட்டக பொறியியலாளர்களும் தயாரிப்பாளர்களும்,
பஸ் நிலைய முன்பாக,
நெல்லியடி, கரவெட்டி.

PAALAN

**A.C. PAALAN**
LOCK AND SAFE
ENGINEERS AND
MANUFACTURERS

NELLIADY,
KARAVEDDY.

# மின்சார பிரச்னையா?

வீட்டு வயரிங் செய்ய (விதிமுறைக்கு அமைய)
★ மோட்டர் ★ ரான்ஸ்போமர் ★ ஸ்பீக்கர்
★ வாஷிங் பேஷின் ★ மிக்சர்ஸ்
★ லிக்குவிடைசேர்ஸ் ★ எலெக்றிக் குக்கர்
★ மின்விசிறிகள் ஆகியன
திருத்த/றீவைன்டிங்செய்ய

**ஒமேகா** கே. கே. எஸ். வீதி, யாழப்பாணம்:
(யாழ்,இந்துக்கல்லூரி அருகில்)

சிறந்த திரைப்படங்களை வழங்கும்
எமது ஸ்தாபனத்தின்
**புதிய வெளியீடுகள்**

நான் சூட்டிய மலர்- PYRAMID
விஜயகாந்த்

வாழ்க்கை- PYRAMID
சிவாஜி-பிரபு

பாதை மாறினால்- PYRAMID
சரத்பாபு-சீமா

முத்து எங்கள் சொத்து-PYRAMID
பிரபு-ராதா

**பாரத் சென்ரர்** 178, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(1003) போன்: 24265


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில்லாலை மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின்பணி

(பண்டத்தரிப்பு)

''கிராம அபிவிருத்தியில் மாதர்களும் தங்கள் பங்களிப்பை செலுத்த வேண்டும் என்ற கிராம அபிவிருத்தி அமைச்சின் திட்டத்தின் பிரகாரம் சில்லாலை மாதர் கிராம அபிவிருத்திச்சங்கம் இப் பகுதியின் அபிவிருத்தியிலும், முன்னேற்றத்திலும் அதிக அக்கறையுடன் செயல்பட்டு வந்துள்ளது. கடந்த முப்பத்திஞன்கு வருடங்களாக இச் சங்கம் ஆற்றிவரும் பொது நல சேவைகள் எமது பிரதேசத்திலுள்ள ஏனைய மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு ஓர் முன் மாதிரியாக இருக்கின்றன.

இவ்வாறு வலிதென் மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு.க.சண்முகநாதன் சில்லாலை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புனரமைப்பு பொதுக் கூட்டத்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார் சங்கத் தலைவி திருமதி.பேளி அத்தனுசியார் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு.சண்முகநாதன் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:-

''மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் அப் பகுதியிலுள்ள மூலவளங்களை நன்கு பயன்படுத்தி குடிசைக் கைத்தொழில் போன்ற வற்றில் ஈடுபட்டு யுவதிகளுக்கு சுய வேலைவாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முன்வர வேண்டும். இச் சங்கம் இப் பகுதியின் சமூக' பொருளாதார அபிவிருத்தியிலும் ஈடுபட்டு பல சாதனைகளை கடந்த காலத்தில் நிகழ்த்தியிருப்பது பராட்டுதற்குரியதாகும்.

உதவி அரசாங்க அதிபர் திரு.சண்முகநாதன் தொடர்ந்து உரையாற்றுகையில் இச் சங்க உறுப்பினர்களுக்கு ஆடு,மாடு,கோழி வளர்ப்புக்கென நடப்பு வருடத்தில் நிதி உதவி வழங்க தாம் நடவடிக்கை மேற்கெள்ள விருப்பதாகவும் தெரிவித்தார்.

திருமதி.பேளி அத்தனுசியார் உரையாற்றுகையில சங்கம் கடந்த 34 வருடகாலமாக சில்லாலையில் மேற்கொண்ட அபிவிருத்திப் பணிகளையும் சேவைகளையும் விபரித்துக் கூறினர்.

கிராம அபிவிருத்தி அதிகாரி திரு.எஸ்.ஜெயக்குமாரும் உரையாற்றினர்: பின்வருவோர் சங்க நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்:- தலைவர்: திருமதி.பேளிஅத்தனுசியார். செயலாளர்:-திருமதி. அ.செல்லத்துரை. பொருளாளர் திருமதி.லெ.ஜேசுதாசன் செயற்குழு உறுப்பினர்களாக 9பேர் தெரிவு செய்யப்பட்னர்.

## 'சிவா' பிறந்ததினம்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர்திரு.எம்.சிவசிதம்பரத்தின் 61வது பிறந்த தினத்தை ஒட்டி நேற்று நல்லூர்த் தொகுதி த.வி.கூட்டணிக் கிளை திருநெல்வேலி அம்மன் ஆலயத்தில் விசேஷ பூசை ஒன்றை நடத்தியது

## இரண்டாவது...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வித்த திரு.குமார் பொன்னம்பலம், இது பற்றி மேலும் யோசித்து கூறுவதற்கு ஒன்றுமில்லை முற்று முழுதாக எதிர்க்கிரேும்'' என்று குறிப்பிட்டார். [இ]

# இன்றைய பலன்

மாதம்: ஆடி
தி தி; 6 [21-7-1984]
வாரம்: சனி
திதி: அட்டமி முன் இரவு 8 10 வரை
நக்ஷத்திரம்: அச்சுவினி பின் இரவு 12-30வரை

மேடம்: சகோதரவழியால் சஞ்சலத்திற்கு இடமுண்டு, தாய்வழியால் உதவியுமுண்டு, குடும்பத்தில் நாவடக்கம் நன்று.

இடபம்: பொறுப்பற்றவகையில் செலவினங்கள் ஏற்படும், உடல் நலத்தைப் பேணிக் கொள்ளவும், முன்னேற்றத்திலும் முட்டுக்கட்டை உண்டு.

மிதுனம்: பெரியோர் உதவியுடன் பெருமைவந்துசேரும், இன்று லாபகரமான காரியங்கள் நடைபெறும், எதிலும் தயக்க நிலை தென்படும், குழந்தையொன்றின் உடல்நலம் பாதிக்கப்படும்.

கடகம்: இன்று சமவருவாய்க்கும் இடமுண்டு. எண்ணிய காரியம் எளிதில் கைகூடும், வணிகர்களுக்குவிருத்தியுண்டு, வாகனச் சொந்தக்காரர்களுக்கும் நன்மையுண்டு.

சிங்கம்: இன்று முன்னேற்றகரமான காரியங்கள்ஆரம்பிக்க கூடலாம், கடன் விவகாரங்களிலும் தொல்லையுண்டு, இன்று பிரயாணத்தைப் பின் போடவும்.

கன்னி: இன்று நஷ்டத்திற்கும் இடமுண்டாம், ஆகவே புதிய முதலீட்டுகளைத் தவிர்ப்பது நன்று, வாகனச் சாரதிகள் அவதானம்வேண்டும், இறைவழிபாடு மேலோங்கும்.

துலாம்: தொழில் முன்னேற்றத்திற்கும் இடமுண்டு குடும்பத்திலும் மகிழ்ச்சி நிலவும் எண்ணிய கருமம் கைகூடும் மாணவர்களாயின் கல்வியில் போற்றத்தக்க முன்னேற்றமுண்டு.

விருச்சிகம்: இன்று எக்காரியத்திலும் அவதானம் வேண்டும் தொழில் நிலையில் உதவிகள் பற்றுக்குறை தென்படும் இல்லத்தில் செலவுகள் பெருகும்.

தனுசு: குடும்பத்தில் சிறப்புக்கு இடமுண்டு தொழிலிலும் முன்னேற்றம் உண்டு, மாணவர்களாயின் கல்வியில் உயர்வுக்கு இடமுண்டு.

மகரம்: தாய் வழியால் தனமும் சேரும் எதிர்பார்த்த விடயத்தில் சிறுமாற்றம் தென்படும் வாகனம் வைத்திருப்போர் அவதானம் வேண்டும் மாணவர்களாயின் கல்வியில் ஊக்கமெடுக்கவும்.

கும்பம்: இன்று அருளும் பொருளும் இணைந்துகிடைக்கும், கடமைபுரியுமிடத்தில் கவனமாக நடந்துகொள்ளவும், மேலதிகாரிகளுடன் கருத்துமோதல்களுக்கும் இடமுண்டு.

மீனம்; இன்று புத்திரர்கள் விடயத்தில் கவலைக்கிடமளிக்

(7ம் பக்கம் பார்க்க)

# வானொலியில் இன்று

காலை
5-30 நாதாஞ்சலி
5-35 தோத்திரமாலை ஸ்ரீ தேவி கருமாரி அம்பாள் சுப்ரபாதம்
6-00 சைவநற்சிந்தனை
6-05 கத்தோலிக்க நற்சிந்தனை
6-10 அறநெறிஆரம் ப முத்துக்குமார சாமி சர்மா
6-25 நிகழ்ச்சிமுன்னேட்டம்
6-30 செய்திகள்
6-40 அறிவிப்புகள்
6-50 மெல்லிசைப்பாடல்
6-55 போதிமாதவனின் போதனைகள்
7-00 ஆங்கிலபாடம்
7-30 மாகாணச்செய்திகள்
7-35 இசையமுதம்
8-15 முஸ்லிம் நிகழ்ச்சி
8-45 தாளவாத்தியக் கச்சேரி- வேலூர் ராம பக்திர
9-15 தமிழ் மூலம் சிங்களம் என். டி. பீரிஸ்
9-30 நாட்டுப்பாடல்
[illegible] தகவல் எஸ். ஜி. என் புஸ்ப ரத்தினம்
10-00 சங்கமம்
10-30 கதைப் பாட்டு திருட்டைத் திருத்திய தந்தை கார்மேகம் நந்தா
10-45 அகில இந்திய வானொலி நிலைய ஒலிப்பதிவு
11-30 மாணிக்கமாலை
11-58 பகல் ஒலிபரப்புமுடிவு

மாலை
6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-15 ஞானக்களஞ்சியம்
6-30 இசைப்பயிற்சி
6-45 லயவின்யாசம் கே. கே. அச்சுதன்
7 00 நாட்டுக்கூத்து

இரவு
7-30 உலகச்செய்திகள்
7-40 மெல்லிசைத்தேர்வு
7-45 செய்திச்சுருள்
8-00 முஸ்லிம் நிகழ்ச்சி
9-00 செய்திகள்
9-10 செய்தியின் பின்னணியில்
9-15 அறிவிப்புகள் பக்திப்பாடல்
9-30 நாடகம் ''வாழ்ந்து காட்டுவோம்'' கலைநேசன்சிவம்
10-00 நாதஸ்வர ப்ருந்த கானம் ஆர். வி. செல்வராஜா
10-30 ஹிந்தி பஜன்ஸ்
11-00 ஒலிபரப்பு முடிவு

## கிரிக்கெட் அணி முகாமையாளர்கள்

(கொழும்பு)

இம்மாதம் 21ம் திகதி முதல் ஆகஸ்ட் மாத நடுப்பகுதிவரை லண்டனில் பல கிரிக்கட் போட்டிகளிலும் விஷேச, டெஸ்ட்போட்டிகளிலும் பங்கு பற்றுவதற்காகசெல்லும் இலங்கைக் கிரிக்கட் கோஷ்டிக்கு திரு என். சண்முகம், திரு எஸ் இராஜசிங்கம் ஆகியோர் முகாமையாளர்களாகப் பணியாற்றவுள்ளனர். (கி)

## சோப்பை விலைகூட்டி விற்றூராம்

[யாழ்ப்பாணம்]

ரூபா 15.50 பெறுமதியான 'சவரின் பார் சோப்' ஒன்றை 25 ருபாவுக்கு விற்பனைசெய்த பிரபல யாழ்ப்பாண வர்த்தகர் ஒருவருக்கு ரூபா1,500 குற்றமும், 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஆறு மாத சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ். நீதவான் எஸ். நாகராசா நேற்று இத்தீர்ப்பை வழங்கினுர்.

மேற்படி குற்றச்சாட்டை எதிரி ஒப்புக்கொண் [illegible] இத்தீர்ப்பை நீதவான் வழங்கினுர்.

விலைக் கட்டுப்பாட்டுப் பரிசோதகர் கே.நவரட்னம் இந்த வழக்கை நடத்தினுர். [சூ]

## அதிபர் றீகன்..,

(3ம் பக்கத் தொடர்ச்சி)

தொழிலை ஆரம்பித்த இவர், இரவுப்பாடசாலைகளில் சட்டக் கல்வியைப் பயின்று சட்டத் தரணியானுர்

பிரபல வர்த்தகர் ஒருவரை மணந்த திருமதி பெரர் மூன்று பிள்ளைகளின் தயாவார். இவரின் தற்போதைய வயது 48 ஆகும்.

அமெரிக்கர்களில் சிலர் இவருக்கு போதியளவு அரசியல் அறிவு இல்லையென்று கருதுகின்றனர். ஆனுல் திருமதி பெரர், எந்த விடயத்திலும் ஒரு புதுமையை எதிர்பார்க்கும் அமெரிக்கர்கள் நிச்சயம் தம்மை உபஜனுதிபதியாகத் தெரிவுசெய்வார்கள் என்று நம்பிக்கை தெரிவித்தார் (கி)


குறெஸ் ட்ரவல் சேர்விசஸ் [பிறைவேற்] லிமிட்டெட்

நீங்கள் வெளிநாடு செல்லவேண்டுமா?

கொழும்பு சென்று பிரயாண ஒழுங்குகள் செய்ய வேண்டுமே என்ற கவலையே வேண்டாம்!

உலகின் எப்பாகத்திற்குச் செல்ல வேண்டுமானுலும் உங்கள் பிரயாணச்சீட்டுக்களை இன்றே யாழ். நகரிலேயே பதிவு செய்துகொள்ள உடன் எமது ஸ்தாபனத்தை நாடுங்கள்.

குறிப்பு: பிரான்ஸ், இத்தாலி, கனடா செல்வதற்கான விசா, பயணச் சீட்டுக்கள் மற்றும் சகல ஒழுங்குகளும் மிகக்குறைந்த கட்டணத்தில் செய்து கொடுக்கப்படும்.

Cross Travel Services (Pte) Ltd.
PASSENGER SALES AGENT FOR SWISSAIR
Telephone: No : 22040, 22065.
TELEX No 22207 (C. T. S) C E
CTS

எமது ஸ்தாபனத்தின் இணைந்த சேவையாக தற்பொழுது ''குறெஸ் சர்வதேச தொலைத்தொடர்பு சேவை'' ஆரம்பித்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறேும்.

* வெளிநாட்டிலுள்ள உங்கள் உறவினருடன் தொடர்பு கொள்ள வேண்டுமா? உங்கள் இல்லங்களிலுள்ள தொலைபேசியிலேயே உறவாடி மகிழ்ந்திட எம்மை நாடுங்கள்.
* உலகின் சகல பாகங்களுக்கும் குறைந்த கட்டணத்தில் நேரடித் தொலைத் தொடர்பு சேவையையும், டெலெக்ஸ் சேவையையும் ஒரு நொடிப்பொழுதில் தாமதமின்றி பெற்றுக்கொள்ளலாம்.

Cross International Telecommunication Services
(குளிரூட்டப்பட்டது–பஸ்நிலையம் முன்பாகவுள்ள மேல்மாடி)
STAGE II, MODEL MARKET
No, 5, 1st FLOOR
BUS STAND CENTRE ROAD, JAFFNA.
Phone No: 22040, 22065. Telex No: 22207 (C. T. S.) C E



மிளகாய் இலைச் சுருளைத் தடுதது அதிக விளைச்சலைப் பெறுங்கள்

BASF
குமுலுஸ் எஸ்

நீரில் கரையக் கூடிய 80% கெந்தகம்

- நீரில் கலந்தவுடன் பால் நிறமாக மாறுகிறது.
- மிளகாய் இலைச் சுருளைத் தோற்றுவிக்கும் மைட்களை அழித்தொழிக்கிறது.
- மரக்கறி பயிர் வகைக்ளில் 'காளான்' தாக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது

இது ஒரு ''மேற்கு ஜெர்மனி 'BASF'' தயாரிப்பாகும்.




குமுலுஸ் எஸ்
500 கிராம் ரூபா 16/50

கிடைக்குமிடம்: சகல விவசாய இரசாயனப் பொருள் விற்பனையாளரிடமும்

Metropolitan

மக்வுட்ஸ் ஸ்தாபனம்
2,ஞானர்த்தபிரதீப மாவத்தை, த.பெ.இல.9 (முன்னுள் மருதானை றேட்,) கொழும்பு 8.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி-சரோஜாதேவி
இருவர் உள்ளம்

மனோகரா (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம்.ஜி.ஆர்-ஜெயலலிதா
ராமன் தேடியசீதை

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00
4-30, 7-00
MY BLOODY
VALENTINE

சாந்தி (யாழ். நகர்)
10-30, 2-30, 6-30
ஜெமினி-விஜயா
ராமு (புதிய பிரதி)

ராஜா (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
எம். ஜி. ஆர்.
ராதாசலுஜா
இதயக்கனி
(புதிய பிரதி)
22-7-84 முதல்
ராமன் எத்தனை
ராமனடி

றீகல் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30 6-00
கமலஹாசன், ஆலம்,
வை. விஜயா
K. பாலசந்தரின்
மன்மதலீலை
[புத்தம் புதிய
வண்ணப் பிரதி]

வின்சர் (யாழ். நகர்
தினசரி 5 காட்சிகள்
13 முதல் 22 வரை
Armand Assante
Barbara Carrera
எதிர்பாராத தாக்கங்களும்-இன்பக் கிளர்ச்சியும் நிறைந்த ஆங்கிலப்படைப்பான
'I The Jury'
பார்க்கத் ...ருதாகள்.
(கண்டிப்பாக வயது
வந்தவர்களுக்குமட்டும்)

ஹரன் (யாழ்.நகர்)
10-30, 12-30, 2-30
4-30, 6-30, 8-30
Sylvia Kristel
Nicholas Clay in
LADY CHATTERLEY'S
LOVER
(strictly for adults)
கண்டிப்பாக வயது
வந்தவர்களுக்கு மட்டும்
கொழும்பில் 130 நாட்கள்
ஓடி சரித்திரம் படைத்த
ஆங்கில திரைக்காவியம்

லிடோ யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 6-30
ஜெய்சங்கர்-லக்ஷ்மி
மாணவன்
Coming soon
BURNING

வெலிங்டன்
(யாழ். நகர்)
10-30, 2-30, 6-30
எம்.ஜி.ஆர்-ஜெயலலிதா
தனிப்பிறவி
(புதிய பிரதி)


கனகபுரம் வித்தியாலய

## அதிபரின் சிறந்த நிர்வாகத்துக்கு கல்விப் பணிப்பாளர் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

''பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டிகளின் தரமும் ஒழுங்கமைப்பும் பாடசாலையின் வளர்ச்சியினை மட்டும் எடுத்துக்காட்டுவதுடன் நின்று விடுவதில்லை, அதிபரது நிர்வாகத் திறமையினையும் ஆசிரியர்களது ஒற்றுமையையும், ஒரே கோஷ்டியாக இயங்கும் தன்மையினையும் எடுத்துக் காட்டுகிறது''.

இவ்வாறு கிளிநொச்சி கனகபுரம் வித்தியாலய இல்ல மெய்வல்லுனர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து உரையாற்றும் பொழுது முல்லைத்தீவு-கிளிநொச்சிக் கல்விப்பணிப்பாளர் ஜனப் எம். எம். மன்சூர் கூறினர்.

இவ் விளையாட்டுப் போட்டி மேற்படி வித்தியாலய அதிபர் திரு. க, சாம்பசிவம் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி கொத்தணி அதிபர் திரு. இரா. சின்னத்தம்பி, முன்னுள் மாவட்டசபை உறுப்பினர் திரு. இ. கிருஷ்ணராசா, கிளிநொச்சி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எம். சண்முகநாதன் ஆகியோர் கலந்து ...

கல்விப் பணிப்பாளர் ஜனப் எம், எம். மன்சூர் தொடர்ந்து பேசுகையில், தாம் கலந்து கொண்ட பெரும்பாலான விளையாட்டுப் போட்டிகளில் அதிபர்களே மைதானம் முழுவதும் வலம்வந்து போட்டியை நடாத்திக்கொண்டிருப்பார்கள், ஆனல் இன்றைய இவ்விளையாட்டுப் போட்டியில் இவ் வித்தியாலயத்தின் அதிபர் எங்கள் கூடவே முழுநேரமும் இருந்து கொண்டிருக்க விளையாட்டுப் போட்டி சிறப்பாக ஒழுங்கான முறையில் நடைபெற்றுக்கொண்டிருந்தது. இதிலிருந்து உங்கள் அதிபரின் நிர்வாகத் திறமையை காணக்கூடியதாக இருக்கிறது' எனக் கூறினர்

வித்தியாலய அதிபர் திரு. க. சாம்பசிவம் தமது தலைமையுரையில், ''பாடசாலைகளின் மெய்வல்லுனர் போட்டிகள் தரமானவையாக அமைய வேண்டுமெனில் தரமான விளையாட்டு மைதானம் அவசியம். இந்நோக்கிலேயே பாடசாலை விளையாட்டு மைதானத்துக்கென ஒதுக்கப்பட்ட காணியை பெற்றோர்களின் ஒத்துழைப்புடன் மிகவும் சிரமத்தின் ஊடாக மைதானமாக்கினேம். எனது வித்தியாலய மாணவர்கள் இரவு பகலாக மைதானத்தை உருவாக்குவதில் பாடுபட்டது அவர்களுக்கு விளையாட்டில் இருக்கும் அதிதீவிர ஆர்வத்தை காட்டுகிறது. மைதானம் சிறந்ததாக போட்டிக்கு ஏற்றதாக அமைந்திருந்தமையே இன்றைய தரமான மெய்வல்லுனர் நிகழ்ச்சியை கனகபுரத்து மக்கள் காணக் கூடியதாக இருந்தது'' என்று கூறினர்.

சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட கொத்தணி அதிபர் திரு, இரா சின்னத்தம்பி, வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எம். சண்முகநாதன் ஆகியோரும் உரையாற்றினர். வெற்றியீட்டிய மாணவர்களுக்கு கல்விப் பணிப்பாளர் ஜனப் எம்.எம். மன்சூர் பரிசில்களை வழங்கினர். வித்தியாலயத்தின் விளையாட்டுச் செயலாளர் திரு. ப. இராமச்சந்திரன் நன்றியுரை வழங்கினர். (வி)

''கிராமப்புற மக்களுடன்,,

## நட்புக்கொண்டிருப்பவர்களே சிறந்த அதிபர்கள்''

### வட்டாரக் கல்வி அதிகாரி பொன். கணேசன்

(யாழ்ப்பாணம்)

''கிராமப்புற மக்களுடன் நெருக்கமான நட்பைகொண்டிருக்கும் அதிபர்களே கிராமப்புற பாடசாலைகளுக்கு சிறந்த அதிபர்கள்''.

இவ்வாறு வேலணை வட்டாரக் கல்வி அதிகாரி திரு பொன் கணேசன், ஊர்காவற்றுறை தம்பாட்டி அரசினர் பாடசாலையில் ஓய்வு பெற்ற அதிபர்திரு சி.சிற்றம்பலத்தின் சேவை நலம் பாராட்டு விழாவில் பேசுகையில் கூறினர்.

வித்தியாலய அதிபர் திரு. ம.அன்ரனிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில் ''கிராமப்புற பாடசாலைகளுக்கு அதிபர்களாக இருப்பவர்கள் அந்த கிராமத்து மக்களுடன் நெருக்கமான உறவைக் கொண்டிருக்க வேண்டும். இந்த வித்தியாலய அதிபராக இருந்த திரு சிற்றம்பலம் இவ்வாறு நெருக்கமான நட்பை கொண்டிருந்தார்'' என்ருர்.

முன்னுல் வட்டாரக் கல்வி அதிகாரி திரு.வ.நடராசா, நாரந்தனை றே.க.மகாவித்தியாலய அதிபர் திரு மைக்கல் விஜயன், கிராமசேவகர் ஏ.தயானந்தன், அ.தவநாதன், ஓய்வு பெற்ற அதிபர் திரு. ஏ சிங்கராயர் உற்பட பலர் உரையாற்றினர்.

## இந்தியாவில் புலிகள் எண்ணிக்கை அதிகரிக்கின்றது

புதுடில்லி ஜூலை 20

இந்தியாவில் புலிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது, கடந்த சில ஆண்டுகளில் புலிகள் இந்தியக் காடுகளில் அருகி வந்தமை கண்டு பிடிக்கப்பட்டது. ஆனல் அண்மையில் நிகழ்த்தப்பட்ட ஆய்வொன்றில் அவற்றின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருவது அறியப்பட்டுள்ளது.

இந்தியாவில் மொத்தம் 15 புலிகள் சரணலயங்கள் இருக்கின்றன. இவற்றில் இந்த ஆண்டு 3500 க்கும் அதிகமான புலிகள் காணப்படுகின்றன. 1979 ம் ஆண்டில் 3015 ஆகவும், 12 வருடங்களுக்கு முன்னர் புலிகள் பாதுகாப்புத் திட்டம் ஆரம்பித்த போது 1827 புலிகளுமே இவற்றில் காணப்பட்டன என்று தற்போதைய ஆய்வறிக்கை கணிப்பிட்டுள்ளது [கி]

## இன்றைய பலன்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கும், அதிக சிந்தனையைத் தவிர்க்கவும், தொழில் விடயத்தில் மந்தநிலை, மாணவர்களாயின் முன்னேற்றமுண்டு.

திருமலை
வே. ரவீந்திரன்

ரூபவாஹினி

(5ம் பக்கத் தொடர்ச்சி]

9-50 'ஸ்வான் லேக்' சோவியத் நடன நிகழ்ச்சி
10-30 உலகச் செய்திகள்
10-35 ஸ்வான் லேக் தொடர்ச்சி
11-00 நிகழ்ச்சிகள் முடிவு

## ஓய்வு பெறும் செல்லையா ''மாஸ்டர்''

சுன்னுகம்நகேஸ்வரிவித்தியாசாலையின் அதிபராக இருந்து சிறப்பான சேவையாற்றிய திரு.க.செல்லையா அவர்கட்கு இன்று சனிக்கிழமை பாடசாலை முன்றலில் சேவை நலம் பராட்டு விழா பி.ப. மூன்று மணிக்கு நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

ஆசிரியர் பற்றுக்குறையுடனும்-அரச நிதியுதவிக் குறைவுடனும் சிறந்த மாணவ சமூகத்தினை உருவாக்க ஆசிரியர்கள் எவ்வாறு பணியாற்ற வேண்டும் என்பதை கற்பித் ஆசான் ''செல்லையா மாஸ்டர்'' இன்று ஓய்வு பெற்ற அதிபராகிறர். ஆனலும் அவர் செய்த அளப்பரிய சாதனைகளும் சேவைகளும் நாகேஸ்வரி வித்தியாசாலை மாணவர்களினதும் - ஆசிரியர்களினதும் இதயங்களில் நின்றும் ஒய்வு பெறமாட்டாது.

ஏழை மாணவர்களுக்கு சனி ... நாட்களில் இலவச வகுப்புகள் ஒழுங்கு செய்து அவர்களுக்கு கல்வி ஒளி ஊட்டியதுடன் தனது சம்பளத்தில் இருந்து பல ஏழை மாணவர்களுககு பென்சில் பேனு வாங்கி கொடுத்த பெரியார் செல்லையாவுக்கு அவர் ஓய்வு பெறும் நாளில் கண்ணீருடன் விடை கொடுக்கும் மாணவர்களும் பெற்றேரும் ''செல்லையாமாஸ்டர் நீங்கள் செல்லாதீர் ஐயா,, என்று கெஞ்சுவது அவரின் அரிய சாதனைக்கு நல்ல சான்ருகும்.

— சபா. புஷ்பநாதன்

## அமரர் சண்முகநாதன்

இந்நாட்டிலும், நைஜீரியாவிலும் சமூக சமயப்பணிகளில் அயராது உழைத்த வேலணையைச் சேர்ந்த பொறியியலாளர் அமரர் பி. சண்முகநாதன் ... கும்.

மலர்ந்த முகம், கூர்ந்த பார்வை ஏறுநெற்றி, நலிந்தோர்க்குதவுங்கை, ''யாதுமூரே யாவரும் கேளிர்' என்ற விசால நோக்கு, எளிமையான இயல்பு, நுண்மதி, நெறி திறம்பா நடை, சைவநீதி விளங்குக உலகமெல்லாம் என்னும் மந்திரம். அழுந்திய மனம் இத்தனையும் வாய்ந்த இனிய பெருந்தகை அமரர் சண்முகநாதன்.

யாழ். இந்துக் கல்லூரியிலும் பின் பல்கலைக்கழகத்திலும், பயின்று பட்டம் பெற்ற இவர் நீர்ப்பாசன திணைக்களத்தில் உயர்பதவி ஏற்ருர். பின் நைஜீரியா சென்று தலைமை பொறியியலாளராக பணியாற்றினர் அங்கு இப்டான் நகரில் கலாசார நிலையமொன்றை நிறுவி தைப்பொங்கல், வருடப் பிறப்பு, சிவராத்திரி, தீபாவளி தினங்களை கொண்டாடி அங்கு தம் கலாசாரத்தை வளர்த்தார்.

கிராமப்பணி, சமூகப்பணி, சமயப்பணிகளில் ஈடுபட்ட இவர் பொலநறுவையில் கடமையாற்றிய காலத்தில், அங்கு சிவலை கோவில் புனருத்தாரண வேலைகளில் முக்கிய பங்கு கொண்டார். கல்வியில் மட்டுமன்றி விளையாட்டு துறையிலும், சிறந்துவிளங்கினர். அன்னரின் ஆத்மாசாந்தியடைக.

ஓர் அன்பர்.

## கரைச்சி லயன்ஸ்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

டர் க. தணிகாசலம், திரு. யோசப் நாயகத்திற்கு லயன்ஸ் கழகத் தலைவரின் சின்னம் அணிவித்து பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். பிரதி மாவட்ட ஆளுநர் திரு. அம்பிகைபாலன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

''கரைச்சி லயன்ஸ் கழகம் ஆரம்பிக்கப்பட்டு ஒருவருடம் தான் ஆகிறது. இக்கழகத்தை நான் லயன் வலயத் தலைவராக பணி ரிந்தபோது அங்குரார்ப்பணம் செய்து வைத்தேன். மிகக் குறுகியகாலத்தில் இக்கழகம் கிளிநொச்சி மாவட்ட மக்களுக்குப் பெரும் சேவையாற்றியுள்ளது என்று கூறினர்.


6-வது ஆண்டு நினைவுதினம்

நல்லூர் செட்டித்தெருவைச் சேர்ந்த
டாக்டர்
சரவணமுத்து சோமசுந்தரம்
தோற்றம்: 2-11-1912 மறைவு: 27-6-1978

என்றும் நிலைத்து நிற்கும் உங்கள் நினைவிற்கு
இன்றும் எம் அஞ்சலிகள்!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றேம்.

அன்பின் மனைவி, மக்கள், மருமக்கள்,
சகோதரர்கள், மைத்துனர்கள்.
பேரப்பிள்ளைகள்.

டாக்டர் C.C.S. ராஜன்,
''கிருஷ்ணு கிளினிக்'', இல. 2, செட்டித்தெரு,
ஆஷாத் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம். (952) யாழ்ப்பாணம்.



நன்றி நவிலலும்
31-வது நாள்
சபிண்டீகரண அழைப்பும்.

திரு. சின்னத்தம்பி சுந்தரம்

மலர்வு: 11-3-1914 உதிர்வு: 22-6-1984



அன்பின் திருவுருவாய் அருளின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய் விளங்கி எங்களை வழி நடத்திய உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல தோப்பு சித்திவிநாயகரைப் பிரார்த்திக்கின்றேம.

22-6-84 இல் சிவபதம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வம் திரு. சின்னத்தம்பி சுந்தரம் அவர்களது இல்லத்தில் 22-7-84 இல் நடைபெறும் ஆத்ம சாந்தி வழிபாட்டிலும் ஏனைய நிகழ்ச்சிகளிலும் கலந்து சிறப்பிக்கும்படி பணிவன்புடன் வேண்டுகின்றேம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
சகோதரங்கள்.

மறவன்புலோ, சாவகச்சேரி. 1000


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கச்சேரி மோசடி வழக்கு;

# எதிரிக்கு மூன்று வருட கடூழிய சிறை

(யாழ்ப்பாணம்)

கச்சேரி மோசடி வழக்கில் எதிரி குற்றவாளியாகக்காணப்பட்டு எதிரிக்கு 3 வருடக் கடூழியச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

இவ் வழக்கு யாழ். மேல்நீதிமன்றத்தில் நீதிபதி திரு. கே. பாலகிட்ணர் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் சுப்பையா தேவசகாயம் வின்சன்ட், ஞானப்பிரகாசம் ஜேசுதாசன், அல்லது பாலச்சந்திரன் என்பவர்கள் 1975 அக்டோபர் 25ம் தேதிக்கும் 75 நவம்பர் 19ம் தேதிக்குமிடையில் விக்டர் என்ற பெயரில் பொய் ஆவணம் புனைவதற்கு ஒத்துக் கொண்டதாகவும் அதேநேரம், அதே இடத்தில் நேர்மையீனமாக ஆவணத்தில் கையொப்பமிட்டதாகவும் 1ம் எதிரி ஆவணத்தை மோசடியாகவும் நேர்மையினமாகவும் உண்மையெனப் பயன்படுத்தியதாகவும், 2ம் எதிரி குற்றம் புரிவதற்கு தூண்டுதலாக இருந்ததாகவும், 75 நவம்பர் 19ல், வழக்கு தொடுநருக்கு தெரியாத வேறு. சிலருடன் யாழ். அரசாங்க அதிபரின் உடைமையில் இருந்த பொருளான 7921 ரூபாவை நேர்மையினமாக கையாடல் புரிந்ததாகவும், சொந்தப்பாவனைக்கு மாற்றியதாகவும் 5குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தது.

இரண்டாம் எதிரி நீதிமன்றம் வரவில்லை. 2ம் எதிரி சார்பில் சட்டத்தரணி எவரும் ஆஜராகவில்லை.

1ம் எதிரி சார்பில் சட்டத்தரணி கே. சிவநாதன், சட்டத்தரணி ஸ்ரீரங்கன், சட்டத்தரணி எஸ். ராஜகாரியர் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார்.

அரசதரப்பில் அரச சட்டத்தரணு கே: ஞானதாசன் ஆஜரானர்.

விசாரணை முடிவில் 1ம் எதிரியை குற்றவாளியாகக் கண்டு 1ம் குற்றச்சாட்டுக்கு ஒருவருட கடூழியமிம் 2ம் குற்றச்சாட்டுக்கு 3 வருட கடூழியமும், 3ம் குற்றச் சாட்டுக்கு 3 வருட கடூழியம் 5ம் குற்றச் சாட்டுக்கு 3 வருட கடூழியமும் விதிக்கப்பட்டு சிறைத் தண்டனை ஏககாலத்தில் அனுபவிக்க வேண்டும் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (க)

## கூட்டம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

இன்று சனிக்கிழமை நடைபெறவிருந்த யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்தக் கூட்டம் தவிர்க்கமுடியாத காரணங்களினல் பின்போடப்பட்டிருப்பதாக அதன் தலைவர் திரு. இராஜா விசுவநாதன் அறிவித்துள்ளார்.

கூட்டம் நடைபெறவிருக்கும் அதேசமயம் கல்லூரியில் பரீட்சையொன்றும் நடைபெறவிருப்பதே இதற்குக் காரணம் என்று கருதப்படுகின்கின்றது.


## மரண அறிவித்தல்

### வேலாயுதபிள்ளை செல்வநாயகம்

[கொக்குவில்]

நயினதீவு அன்னதானசபை இயக்குனரும் முன்னள் விவேகானந்த அச்சக உரிமையாளரும், காலஞ்சென்ற நாகரத்தினத்தின் கணவரும் பவனி,மாலினி(ஆசிரியை மல்லாவி), சிறீதரன் (ஜேர்மனி), கிருபாகரன், கிரிசாலினி, பரிபாலினி ஆகியோரின் அன்புத்தந்தையும் குணராஜா(குணம் அன்கோ), Dr.வேதனுதன் (மக்கள் வைத்தியசாலை, மல்லாவி), சிவகுமாரி, வரதராஜன் ஆகியோரின் மாமனுரும், காலஞ்சென்ற சிவலிங்கம், கந்தசாமி கிருஷ்ணபிள்ளை, சுந்தரம்பிள்ளை, திருநாவுக்கரசு, கார்திகேசு ஆகியோரின் சகோதரனும் ஆவார். அன்னரின் பூதவுடல் சனிக்கிழமை மலை 4-00 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். உற்றூர், உறவினர் ஏற்றுக் கொள்ளவும். 1015



## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை கந்தையா

(அத்தியடி)

யாழ்ப்பாணம் அத்தியடி 128, அம்பலவாணர் வீதியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை கந்தையா 20-7-84ல் காலமானுர். இவர் செல்லம்மாவின் அன்புக் கணவரும் கமலராஜ் (குவைத்), அமுதராஜா (அமெரிக்கா), உருத்திரா (ருஷாந்தி பேணிச்சேர்ஸ் உரிமையாளர்), பாஸ்கரன் (ஜேர்மனி), கமலாதேவி, விமலாதேவி, கலாரஞ்சினி, நிர்மலா ஆகியோரின் தந்தையும் ராஜசிங்கம், ஜெனே, ஜெயந்தி ஆகியோரின் மாமனுரும், நிலோஜன், பியோநிலோஜன் ஆகியோரின் பேரனும் சின்னம்மாவின் சகோதரரும், இராசையா, பூவிலிங்கம் ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். 1014


இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஜுலை மாதம் 21ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49, Telegram Eelanadu, Telephone: 22389 — 24126.

## புவனேந்திரன் ஜப்பான் விஜயம்

(பச்சிலைப்பள்ளி)

ஜப்பானில் நடைபெறவிருக்கும் உலக சாரணர் இயக்கக் கருத்தரங்கில் இலங்கையின் பிரதிநிதியாக கலந்துகொள்ளும் பொருட்டு வட்டக்கச்சி மகாவித்தியாவய சாரண ஆசிரியர் திரு. ம. புவனேந்திரன் அங்கு பயணமானுர்.

கடந்த 30 வருடங்களுக்குப் பின்னர் ஒரு தமிழர் இக்கருத்தரங்கில் இம்முறை கலந்து கொள்வது குறிப்பிடத்தக்கது.

## எதிரிக்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

5 நாட்கள் மருத்துவ சான்றிதழ் வழங்கியதாகவும் தெரிவித்தார்.

இதைத்தொடர்ந்தே நீதிபதி நன்ருக பரிசோதனை செய்தபின் அவதானமாக மருத்துவ சான்றிதழ் வழங்க வேண்டும் என்று தெரிவித்தார். (க)

## வதந்திகளை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வளிக்க வேண்டும்.

''அமைதியையும், சமாதானத்தையும் நிலைநாட்ட அரசாங்கம் சகல முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது''

## யாழ். பல்கலைக்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கப்படுகிறது.

இக்கொள்ளைச் சம்பவம் தொடர்பாக யாழ். பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

கொள்ளையடித்தவர்கள் அச்சமயம் அங்கு கடமையிலிருந்த ஊழியர்கள், உத்தியோகத்தர்கள், மாணவர்கள் யாவருக்கும் தெரியாத விதத்திலேயே நாசூக்காக பணத்தை கொள்ளை அடித்துச் சென்றதாகப் பல்கலைக்கழக வட்டாரம் தெரிவித்தது. (மா)

## இளைஞர்...

(1-ம் பக்கத் தொடர்ச்கி)

தூரம்ஓடி விழுந்ததாகவும், மற்றவர் மோட்டார் சைக்கிளுக்கருகே விழுந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினர் இருவரின் சடலங்களையும் யாழ். பொலிசாரிடம் ஒப்படைத்ததும் சடலங்கள் யாழ். [illegible] பிரேத அறையில் விசாரணைக்காகவைத்தனர்.

பிரேத பரிசோதனையின்பின் பெற்றோர் மேலதிகாரிகளிடம் சடலங்களை தம்மிடம் ஒப்படைக்குமாறு கோரியதன் பேரில் இருசடலங்களும் நிபந்தனைகளின்பேரில் நேற்றுமுன்தினம் இரவு கையளிக்கப்பட்டன. [மா]

## ஹர்த்தால்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கூட்டணித் தலைமைப்பீடம் முடிவு செய்திருந்தபோதிலும், ஒரேநாளில் அவ்விதம் இரண்டையும் நிறைவேற்றுவதால் சில பிரச்னைகள் உருவாகலாம் என்றும் 24-ல்உண்ணுவிரதமும் 25ல் ஹர்த்தாலும் நடாத்துவதே உகந்தது என்றும் பொதுச்சபை முடிவு செய்யும் என்று கூட்டணியின் முக்கிய பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

### 25, 26ல் ஹர்த்தால்

இம் மாதம் 25ம், 26ம் திகதிகளில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கும்படி கோரும் சுவரொட்டிகள் குடாநாடெங்கும் காணப்படுகின்றன.

தமிழீழ விடுதலை இயக்கம் வெளியிட்டுள்ள இச்சுவரொட்டிகளில் 25ம், 26ம் திகதிகளில் ஹர்த்தால் அனுஷ்டிக்கும்படி கேட்டுள்ளது. (மா)

## பிக்கு இசித்தானி ஜப்பான் சென்றுள்ளார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தங்கி பிரார்த்தனைகளில் ஈடுபட்டு வந்தவரும், சுன்னுகத்தில் இளைஞர்களால் சோதனைக்குட்படுத்தப்பட்டவருமான ஜப்பானிய பிக்கு இசித்தானி தமது குருதேவரின் பிறந்த நாள் விழாவில் கலந்துகொள்வதற்காக ஜப்பானுக்குத்திரும்பிச்சென்றுள்ளார்.

இலங்கையில் தற்பொழுது பலஇடங்களிலும் தங்கியிருந்து ஜப்பானிய பௌத்த மத நடைமுறைகளைப் பரப்பிவரும் பல ஜப்பானிய பிக்குகளும் இப்பொழுது ஜப்பானுக்குத் திரும்பிச் செல்கிருர்கள். இவர்களின் குருவான வண. நிச்சிதாத்சு புஜீஅவர்களின் 100வது பிறந்தநாள் ஹிரோஷிமாவில் அணுகுண்டு வீசப்பட்ட தினத்தில் வருகின்றது. தற்பொழுதும் உயிருடனிருந்து தமது சீடர்களுக்கு வழிகாட்டிவரும் குருவை தரிசித்து ஆசிபெறுவதற்காக இவர்கள் ஜப்பானுக்குத்திரும்பிக்கொண்டிருக்கிருர்கள்.

யாழ்ப்பாணத்திலிருந்து சென்றுள்ள பிக்கு இசித்தானி தமது குருதேவரின் பிறந்த நாள்விழாவில் கலந்துகொண்டுவிட்டு மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பவிருப்பதாகக் கூறினர்.

## ஒழுக்கமில்லாத கல்வியால் பயன்பெறமுடியாது"

### யாழ். கல்வியதிகாரி கருத்து

(மாவிட்டபுரம்)

''பாடசாலை மாணவர்கள் தமது கல்வியை எவ்வளவு தூரம் வளர்த்துக் கொண்டா[illegible] ஒழுக்க[illegible] இல்லாதவர்களாக அவர்கள் இருந்தால் அவர்களது கல்வியால் பயனில்லை. ஆகவே சிறுவயதிலிருந்தே ஒழுக்கத்தை வளர்த்துக் கொள்ள மாணவர்கள் முன்வரவேண்டும். அவர்களது அடிமனதிலிருந்து ஒழுக்கம் வளரவேண்டும்''

இவ்வாறு வீமன்காமம் மகாவித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம அதிதியாகக்கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். மாவட்ட கல்வி அதிகாரி திரு.இராசநாயகம் கூறினர்.

வித்தியால[illegible] திரு மு.சிவராசா தலைமையில் இவ் விளையாட்டுப் போட்டி நடைபெற்றது.

அதிபர் திரு மு.சிவராசா தமதுரையில்: ''மாணவர்களது உடல், உள வளர்ச்சிக்கு உதவும் விளையாட்டுப் போட்டியை இப்பாடசாலையில் ஒழுங்கு செய்து நடத்த உதவிய ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோருக்கு நன்றி கூறினர்.

## மூன்று இஸ்ரேலியர்கள் விளக்கமறியலில்!

லண்டன், ஜுலை 20

நைஜீரிய பிரமுகரான திரு. மாருடிக்கோவை கடத்த முயன்றது தொடர்பாக பிரிட்டனில் உள்ள நைஜீரிய இராஜதந்திரிஒருவரும், மூன்று இஸ்ரேலியர்களும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இருவாரங்களுக்கு முன்னர் லண்டனிலிருந்து நைஜீரிய விமானமொன்றில் திரு. டிக்கோ போதையூட்டப்பட்ட நிலையில் நைஜீரியாவுக்குக் கடத்தப்படவிருந்தார்.

இவர் பெரிய பெட்டியொன்றிலேயே கடத்தப்பட்டு விமானத்தில் ஏற்றப்படவிருந்த சமயம் பொலிஸார் இவரை மீட்டெடுத்தனர். இக்கடத்தல் தொடர்பாக இஸ்ரேலியர்கள் மூவரும் நைஜீரிய ராஜதந்திரி ஒருவரும் கைதுசெய்யப்பட்டனர். இவர்கள் மீதான விசாரணைகள் தொடருகின்றன. [கி]

## "தமிழ்மொழி மூலம் பயிலும் மாணவிகளுக்கு மனையியல் டிப்ளோமா பயிற்சிக்கு வசதியில்லை"

(அரியாலை)

''மனையியல் பாடத்தில் டிப்ளோமா பயிற்சி பெறுவதற்கான வசதிகள் இல்லாததால் தமிழ் மொழி மூலம் கல்வி கற்கும் தமிழ் முஸ்லிம் மாணவிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தெகிவலை பல் தொழில் நுட்பக்கல்லூரியில் சிங்கள மொழி மூலம் கல்வி கற்கும் சிங்கள மாணவிகள் மனையியல் பாடத்தில் டிப்ளோமா பயிற்சி பெறுவதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அதற்கான விண்ணப்பங்களும் கோரப்பட்டுள்ளன.

தமிழ் மொழி மூலம் கல்வி கற்கும் தமிழ் முஸ்லிம் மாணவிகள்டிப்ளோமா பயிற்சிபெறுவதற்கான வசதிகள் வடக்கிலும் கிழக்கிலும் இருக்கும் பல் தொழில் நுட்பக்கல்லூரிகளில் இதுவரை செய்யப்படாமலிருப்பதால் தமிழ் மாணவிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## உரிமை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் அதிரடிப் பிரிவினர் நிறுத்தும்படி உத்தரவிட்டதாகவும், அவர்கள் நிறுத்தாமல் தொடர்ந்து செல்லவே, பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும், அப்பொழுது மோட்டார் சைக்கிளின் பின்னல் இருந்து சென்ற ரஞ்சன் லாலா என்பவர் துப்பாக்கிச் சூடு காரணமாக மரணமானதாகவும் ராஜாங்க அமைச்சு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது (மா)

## கரை ஒதுங்கிய...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

சட்ட அலுவல்களை யாழ்ப்பாணத்தில் கவனிக்கும் சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியத்திற்கும் தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து திரு பாலசுப்பிரமணியம் நேற்று, இந்திய தூதராலயத்துடன் தொடர்புகொண்டு வேறு ஒரு கப்பலை அனுப்பி, பழுதடைந்த வள்ளத்தை கொண்டு செல்ல ஏற்பாடு செய்யுமாறும் தஞ்சமடைந்துள்ள தமிழ்நாடு மீனவர்களை திருப்பி அனுப்ப ஒழுங்கு செய்யுமாறு கேட்டுக் கொண்டார். (க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org